விளம்பர விகிதங்களுக்கு :
மனேஜர்,
சத்தியவேத பாதுகாவலன்
பெரியதெரு,
யாழ்ப்பாணம்
என்ற முகவரிக்கு எழுதுக.

# சத்தியவேத பாதுகாவலன்

சந்தா விபரம்
வருடசந்தா
இலங்கை ரூபா 5-50
வெளிநாடுகள் „ 6-50

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. | 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. | Telephone : No. 300
REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

85-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1960-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 38-ம் இலக்கம்

# கருதினுல் அகஜியானியன் ஆண்டகையின் லங்கா விஜயம்

விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரான கருதினுல் கிறெகறி பீற்றர் அகஜியானியன் ஆண்டகை சென்ற 20-ந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் இந்திய எயர்—லைன்ஸ் விமானம் ஒன்றிலே இரத்மலானை விமானநிலையத்தில் வந்திறங்கியபோது, கொழும்பு அதிமேற்றிராணியாரும், காலி, சிலாபம், யாழ்ப்பாணம், கண்டிமேற்றிராணிமாரும், திரிகோணமலை மேற்றிராசன பரிபாலனசுவாமிகளும், ஆசீர்வாதப்பர்சபை மடாதிபர்ஜெனறலும், பெருந்தொகையான குருமார், சங்கியாசர், கன்னியாஸ்திரிமாரும், பல்லாயிரக்கணக்கான கத்தோலிக்கமக்களும் சனசமுத்திரம் போலக் குழுமியிருந்து ஆனந்த ஆர்ப்பரிப்புகள்மத்தியிலே மகா ஆடம்பரமாக அவரைவரவேற்றுநின்றுர்கள். அவர் விமானத்திலிருந்து இறங்கியதும் முந்தஅவருடையதிருஷ்டி இலங்கையின் மகா அத்தியட்சகரான கொழும்புஅதிமேற்றிராணியார் தோமஸ் கூறே ஆண்டவர்மீதே சென்றது. அதிமேற்றிராணியாரே முதன்முதலாக அவரின் "சமாதானமுத்தம்"பெற்றுர்.

கருதினுல்ஆண்டகைஅவர்களுடன் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மகாமேன்மைதங்கிய ஜே. ஆர். நொக்ஸ் ஆண்டகையும், மொன்சிஞ்ஞோர் போர்ன்யா, மொன்சிஞ்ஞோர் லலிஎனும் குரவர்களும் வந்திருந்தார்கள். சிறுதுவேளையின்பின் சேர் எட்வாட் ஜயதிலகஅவர்கள் இலங்கைக் கத்தோலிக்கமக்களின்சார்பாக அவர்கள்மத்தியிலே கருதினுல்ஆண்டகை அவர்களை வரவேற்றதும், அவர்பெரிதும் உணர்ச்சிவசப்பட்டவராய் இனிமையானகுரலிலே, அழகான மொழிகள்கொண்டு பேசியபோது: ரோமாபுரியிலுள்ள பரிசுத்தபிதாவிடமிருந்து கத்தோலிக்கமக்களுக்கு மாத்திரமல்ல, ஆனுல்,லங்காவின் பிரசைகள்சகலருக்குமே அன்பின்செய்தி ஒன்றைக் கொண்டுவந்திருப்பதாக அறிவித்தார். அதன்மேல்அவர் நூற்றுக்குமேற்பட்டகார்கள் முன்செல்ல, 'இரத்மலானை விமானநிலையத்திலிருந்து பொறளையிலுள்ள அதிமேற்றிராணியாரின் இல்லத்துக்கு வெற்றிப்பிரவேசம்போன்று பெரியஊர்வலமாகச்சென்றுர்.

அவர்சென்றவீதிகளின் இருமருங்கும் பல்வேறு முக்கியஸ்தானங்களிலும்மக்கள்திரளாகக்குழுமியிருந்து அவருக்கு வணக்கம்தெரிவித்துநின்றுர்கள். தெஹிவலை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, பொறளைஆதியாம் இடங்களிலே புழக்கமான சந்திகள், தலங்களில் பாடசாலைப்பிள்ளைகள் பாப்பரசின்கொடிகளைஉயர்த்தி ஆர்ப்பரித்து அவரை வாழ்த்திஞர்கள்.

பின்னர் அன்றுபிற்பகல் கருதினுல்ஆண்டகைஅவர்கள் கொட்டாஞ்சேனை, சந்தலூஸியாவின் ஆசனக்கோவிலிலே பெருந்திரளானபக்தர்கள் குழுமியிருந்தசமுகத்தில் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம்அருளிப்பெரிதும்அருட்சிக்குரிய ஒருபிரசங்கம் நிகழ்த்திஞர். அன்றுபிற்பகலே அப்போஸ்தலிக்க ஸ்தானுபதி ஆண்டகையுடனும், கொழும்புஅதிமேற்றிராணியாருடனும், முன்சொன்ன இருமொன்சிஞ்ஞோர்மாருடனும் சென்று மரியாதைசெலுத்துமுகமாக அவர் மகாதேசாதிபதியைச் சந்தித்துத் திரும்பிஞர்.

புதன்கிழமைகாலை அவர் குருமார், சங்கியாசர், கன்னியாஸ்திரிமாரின் வேறுவேருன பல்வேறுகூட்டங்களிலும் உரைநிகழ்த்திஞர். அன்றுபிற்பகல் கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரியிலே பெருந்தொகையானமக்கள் சமுகமளித்திருக்க அவருக்குப் பகிரங்க வரவேற்பு உபசாரம்ஒன்று பெரும்பரிமளிப்பாக நடத்தப்படலாயிற்று. பின்னர்அன்றிரவு 7மணிக்குப் பொறளை, சகலஅர்ச்சியசிட்டவர்களின் ஆலயதிருசேத்திரத்தில் பக்தியருட்சியாக நடந்தேறிய சதாசகாயமாதா நோவனைப்பக்தி முயற்சிக்குச் சமுகமளித்தார். வியாழக்கிழமைகாலை கண்டிநகர் சென்று அங்குதேசியகுருமடத்தின் புதியகட்டடத்தொகுதிக்கு அத்திவாரக்கல் நாட்டிஞர். பிற்பகல் அர்ச். அந்தோனியாரின் ஆசனக்கோவிலில் பெருந்திரளாகக் குழுமியிருந்த கண்டிக்கத்தோலிக்கமக்களுக்கு ஓர் உரைநிகழ்த்தி அவர்களுக்குத் தமது ஆசிவழங்கிஞர். அகிலமுழுவதிலுமுள்ள திருச்சபைத் திருத்தொண்டுகளை வழிநடத்துவதிலே ரோமாபுரியில் இருந்துவருகின்ற பரிசுத்தபாப்பரசருடன் மற்றெவரைக்காட்டிலும் அதிகமதிகம் நெருங்கியதொடர்புடையவரான கருதினுல்ஆண்டகைஅவர்களை நேர்முகமாகக் கண்டுகளிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றுக்கொண்ட ஸ்ரீலங்காவின் கத்தோலிக்கமக்களிடமிருந்து அவர்பெற்றுக்கொண்ட நல்வரவேற்பானது ஆழ்ந்தபற்றுதலுடனும், தானுகவேபிறந்த அதிமிக மனேற்சாகத்துடனும், இதயபூர்வத்துடனும் அருளப்பெற்றதுஎன்க.

# கருதினுல் அகஜியானியன் ஆண்டகையின் பிரியாவிடைச் சுபசெய்தி

இலங்கையாகிய இந்தஅலங்காரமான துவீபத்தைவிட்டு நாம் பிரிந்துசெல்லும் இச்சந்தர்ப்பத்திலே இங்கு கத்தோலிக்க வாழ்க்கையின் செழுமை சம்பந்தமாக நம்முடைய இதயமானது திருப்திகரமானதாய் இருக்கின்றது. நாம் கண்ணுரக்கண்ட வேதவிசுவாசத்தின் அநேகமான வெளியரங்க காட்சிகள் எமது மனதிலே அநேக வருடங்களுக்கு அழியாமல் பதிந்திருக்கும். உங்கள்மத்தியிலே தங்கியிருக்கக் கிடைத்த இச்சில நாட்கள் பல்லாண்டுகளாக எமக்கு மனப்பாக்கியம் நிறைந்த ஒரு ஞாபகமாய் இருந்துவரும்.

ஆற்றல்மிகுந்தவர்களும், பக்திவைராக்கியம் நிறைந்தவர்களுமான உங்கள்அதிமேற்றிராணியாரும், மேற்றிராணிமாரும் தங்கள்முயற்சிகளிலெல்லாம் தங்களுடையதிருச்சபையை நேசிக்கிறவர்களும், அதன் சேவைக்காகப் பரித்தியாகஞ் செய்யச் சித்தமாயிருக்கிறவர்களுமான கீழ்ப்படிதலும், பக்திபற்றுதலுமுள்ள மக்களாலே பிரமாணிக்கமாக ஆதரவளிக்கப்படுகிருர்கள். தேவன் தமது பராமரிக்கையின் வழிகளிலே அவர்களுடைய முயற்சிகளை நிச்சயமாகவே ஆசீர்வதித்தருளுவார்.

உங்கள் நாட்டிலே திருச்சபை சாதித்துள்ளவைகளைப் பற்றிப் பெருமைகொள்ளுங்கள். பாப்பரசரான நம்முடைய் பரிசுத்த பிதாவாகிய கிறீஸ்துநாதரின் பதிலாளியுடைய நாமத்திஞலே உங்களை ஆட்சிசெய்கின்ற அதன் ஆயர்களுக்குப் பிரமாணிக்கமாயிருங்கள். உங்கள் திருச்சபையையும், இலங்கையையும் நேசியுங்கள். இந்த இரு கடமைகளிலுமே உங்கள் சுபீட்சமான துவீபத்தின் பாக்கியமானஎதிர்காலம் தங்கியிருக்கிறது. உங்கள் எல்லோரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக!

## காலஞ்சென்ற அமெரிக்க கருதினுல்

ஐக்கியஅமெரிக்கதேச பிலடெல்பியாநகர் அதிமேற்றிராணியாரான கருதினுல்ஜோண் பிரான்சீஸ் ஓ'ஹறாஆண்டவர் தமது 72-ம்வயதிலே சென்றஆவணி மாதம் 28-ந்திகதியன்று காலஞ்செல்லலாயினர். இவரின்மரணசெய்தியை அறியவந்த பரிசுத்த பாப்பரசர் அவரின்ஆன்மஇளைப்பாற்றிக்காகத் தமதுபிரத்தியேக சிற்றூலயத்திலே திவ்வியபூசை நிறைவேற்றிஞர். இவர் கருதினுல் பதவிக்கு உயர்த்தப்பட்டு 20மாதமும், 2வாரமும்மாத்திரமே. 18 வயதுடையவராய் இருக்கும்போதே இவர் உறுக்கிவேநாட்டிலுள்ள அமெரிக்கதூதுவராலயத்தின் காரியதரிசியாக நியமனஞ்செய்யப்பெற்றிருந்தார். பின்னர் சுகத்தாழ்வுகாரணமாக அப்பதவியை இராசிநாமாச்செய்துவிட்டு அமெரிக்கவர்த்தக கருமசாலையில் பதவிவகித்திருக்கும்போது, தேவஅழைத்தலுக்குச் செவிசாய்த்து 1911-ம்ஆண்டு திருச்சிலுவைச்சபையில்சேர்ந்து 1916-ம்ஆண்டு குருப்பட்டம் பெற்றுர். அதன்மேல் சர்வகலாசாலைகளிலும், அரசாங்கத்தின் பல்வேறுதூதுக்கோஷ்டிகளிலும் அங்கத்துவராக நியமனஞ்செய்யப்பட்டார். 1945-ம்ஆண்டு பவலோநகர் மேற்றிராணியாராகவும், 1952-ம்ஆண்டு பிலடெல்பியாநகர் அதிமேற்றிராணியாராகவும் நியமனஞ்செய்யப்பெற்று இற்றைக்குச் சுமார் 20 மாதங்களின்முன் ஒருகருதினுலாயினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டுபிடித்த குறை என்ன?

" மாக்ஸீய அரசாங்கங்கள் நீங்கலாக எந்தஒருஜனநாயக அரசாங்கமும் தனி மனிதசுதந்திரத்தில் ஒருபோதும் கை வைப்பதில்லை. எனவே, ஜனநாயகரீதி யில் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கம் சனங்களில் ஒருபகுதியினரின் கருத்தைத் துச்சமெனமதித்து, மற்றப்பகுதியினரின் இஷ்டத்தைப்பூர்த்திசெய்ய எத்தனிப்பது ஜனநாயக தர்மமல்ல" என்று உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்துநடத்தத் தீர்மானித்திருப்பதை ஆட்சேபித்துத் தெஹிவோவிற்ற கத்தோலிக்க கலவன் பாடசாலைமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில்பேசிய டக்றர்பெறேரு அவர்கள் குறிப்பிட்டார். அவர் மேலும்பேசுகையில்: நாட்டு முன்னேற்றத்தில் நாட்டமுள்ள எண்ணற்ற தியாகிகளையும், கல்விமான்களையும் உருவாக்கி அளித்தபெருமை தனியார்பாடசாலைகளையே சாரும். நாடு இதை நன்கறியும். எந்தவகையில் பார்த்தாலும் அரசாங்கபாடசாலைகளை விடத் தனியார்பாடசாலைகள் மிகஉயர்ந்தனவே. அப்படியாயின் தனியார்பாடசாலைகளை அரசாங்கம் இச்சித்ததிற்குச் சுயநலமே காரணமென்பதில் தவறுண்டா? அப்படியில்லையென்றால் தனியார்பாடசாலைகளில் அரசாங்கம் என்னதான்குறை கண்டுபிடித்துவிட்டது? இந்தக்குழப்பகரமான சந்தர்ப்பத்தில் பாரபட்சமற்ற ஒருகம்மிஷனை நியமித்து நிலைமையை ஆராய்வதுதான் விவேகமேயன்றிப் பெரும்பான்மைப் பேரைச்சொல்லிச் சிறுபான்மையினரின் உரிமைகளை அலட்சியம்செய்வதன்று என்றும்குறிப்பிட்டார்.

அடுத்தபடியாகப்பேசிய திரு. ஜே. பீற்றர்அவர்கள் குறிப்பிட்டதாவது: மதச்சூழ்நிலையுடன் இயங்கும் தனியார்பாடசாலைகளே ஒருபிள்ளைக்கு உண்மையான— பூரணமான கல்வியை அளிக்கக்கூடியது. மதபோதனையில்லாத வெறும்ஏட்டுப்படிப்பு ஒருமாணவனையோ, மாணவியையோ நாட்டுப் பற்றுள்ள ஒருநல்லபிரஜையாக்க லாயக்கற்றது. தனியார்பாடசாலைகள் இதுவரை எத்தனையோ தேசாபிமானிகளையும், கல்விமான்களையும் உருவாக்கி நாட்டுக்கும், உலகத்துக்கும் அளித்துள்ளன. தனியார்பாடசாலைகளின் சிறப்பையும், மேன்மையையும் அறிந்ததால்தானே நமது அரசியல்வாதிகளில் பலரும் தங்கள்பிள்ளைகளைத் தனியார் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர். அப்படியானால், நாட்டுக்குப் பெருமையைத் தேடித்தரும் தனியார்பாடசாலைகளை அரசாங்கம்பறிக்க எத்தனிப்பது நியாயமா? ஏற்கனவேயுள்ள அரசாங்கபாடசாலைகள் பொதுமக்களின் கவனத்தைக் கவரவில்லையே. இந்த நிலைமையில் அந்தப்பாடசாலைகளின் தரத்தை உயர்த்தி, அத்தோடு மேலும் பலபாடசாலைகளையும்கட்டிப் பாடசாலை போகமுடியாமலிருக்கும் பலஆயிரக்கணக்கணக்கான பிள்ளைகளுக்குக் கைகொடுத்துதவுவதுதானே சரியானவழி. மேலும், கத்தோலிக்கரைப் பொறுத்தமட்டில் அவர்கள் கோவிலையும், பாடசாலையையும் தங்களது இருகண்களாக மதிக்கின்றனர். ஆதலால்தான் பாடசாலைகள்விஷயத்தில் திருச்சபை அவ்வளவுதீவிரமாகப் போராடுகின்றது. திருச்சபைக்குரவர்கள் எத்தனையோ ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்துவந்து தங்கள்வாழ்வையே இப்பணிக்காக அர்ப்பணித்திருக்கின்றனர். அவர்களுடைய இந்தத்தியாகத்தின் காரணமாக இன்று கத்தோலிக்கபாடசாலைகள் உலகம்போற்றும்விதத்தில் மனிதசமுதாயத்துக்குச் சேவைசெய்கின்றன. நாட்டுமக்கள் அனைவரும் இதைநன்கறிவர். மனிதசமுதாயத்துக்குப் பாரபட்சமற்றமுறையில் பணியாற்றுவதின்மூலமே இறைவன் எமதுமட்டில் காட்டும்அன்புக்கு நன்றி செலுத்த முடியும்என்ற நம்பிக்கையுடையோர் நாம். நமதுபிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது, இதரமதக்குழந்தைகளுக்கும் நமதுபாடசாலைகளில் பாரபட்சமின்றிக் கல்விஅளிக்கப்படுகின்றது. இதரமதத்தினரும் நம்மைப் போல் இதயசுத்தியுடன் பிள்ளைகள் விஷயத்தில் நடந்துகொள்வார்களானால் நமதுபாடசாலைகளின்தரத்தை அவர்களுடையபாடசாலைகளும் எட்டிப்பிடிக்கலாம். தங்கள்பாடசாலைகளுக்காக நம்மைப்போல் அவர்களும் எல்லாத்தியாகங்களையும் செய்வார்களேயானால் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்க வேண்டுமென்று கூப்பாடுபோடவேண்டிய அவசியமே ஏற்படாது.

மதக்கல்வியின் அவசியத்தை எல்லோரும் உணருகின்றனர். குறிப்பிட்ட ஒருமதத்தைச்சார்ந்த பெரும்பான்மையோர் அரசாங்கத்தில் இருப்பதால் சம்பந்தப்பட்டமதத்திற்கு ஆதரவு கிடைக்கும்என்ற நம்பிக்கை ஒருசிலருக்கிருக்கலாம். ஆனால், அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின்னர் மதபோதனை பாடசாலைகளில் தற்போதுபோல் பிரதானபோதனையாய் இருக்குமென்று நம்புவதுபிழை. மனிதனின் ஆத்துமத்தைப்பற்றியகவலை அரசாங்கத்திற்கிருக்க நியாயமில்லை. அது மக்களின் பிறதேவைகளைக் கவனிக்கவேஇருக்கிறது. ஆத்மீக தேவைகளைக் கவனிக்கப் பெரியோர்களால் நடாத்தப்பெறும் பாடசாலைகளிலேயே உண்மையான ஆத்மீகஅறிவு வளரமுடியும். ஆகவே, நமதுபிள்ளைகளின் நல்வாழ்வில் அக்கறையுள்ள நாமே நமதுபிள்ளைகள் எத்தகைய பாடசாலையில் பயிலவேண்டுமென்று தீர்மானிக்க உரிமைபெற்றவர்களாயுமிருக்கிறோம். நாம் எண்ணிக்கையில் குறைவானவர்களாய் இருக்கலாம். என்றாலும் பெரும்பான்மையினரைப் போல் நாமும் இந்நாட்டில் பிரசைகள் என்பதை மனதிற்கொண்டு நாம்விரும்பாதவைதையும் நம்மீதுதிணிக்காதிருக்க வேண்டுமென அரசாங்கத்தை வினயமுடன்வேண்டுகின்றோம்.

கூட்டமுடிவில், தனியார்பாடசாலைகள் விஷயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கவிருக்கும் கொள்கையில் தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கும் இப்பகுதிப்பெற்றோர்களின் கையொப்பமுடன் கூடிய தீர்மானத்தைப் பிரதமருக்கும், கல்விமந்திரிக்கும்அனுப்ப முடிவுசெய்யப்பட்டது.



# பல தேசங்களில்

## மக்களின் கும்பல்வாழ்க்கை

இந்தியாவிலே குடந்தை அரசினர் கல்வித் தமிழ்ப்பேராசிரியர் திரு. சு. கிருஷ்ணமூர்த்திஅவர்கள் அண்மையில்தான் ரூஷியாவிலிருந்து தாயகம் திரும்பினர். ரூஷியஅரசாங்கத்தின் கலை, விஞ்ஞான ஆராய்ச்சித்துறையில் இரண்டரைஆண்டுகளாக இவர்பணியாற்றியவர். தாம்ரூஷியாவில் தங்கியிருந்த இரண்டரைவருடகாலத்திலும் அங்குகண்டவைகளைப்பற்றிக் கூறியது வருமாறு: "ரூஷியா பூலோகசொர்க்கமா? இல்லை. அங்கு பிச்சைக்காரர்கள் உள்ளனர். அங்கு முடிச்சவிழ்த்தல், திருட்டு, கொலை, கொள்ளை போன்றவைகள் நடக்கின்றன. அங்கு எல்லாமே பொதுஉடைமைதான். குடும்பம்என்ற ஒருஅமைப்பே இருக்கக்கூடாது என்பதுதான் கம்யூனிஸத்தின் இறுதிக்குறிக்கோளாகும்" என்பதே. மேலும்அவர் கூறியவைகள் பெரிதும் இரங்கத்தக்கனவாகும்.

* * *

● அமெரிக்கவிமானப்படை சென்ற 13-ந்திகதியன்று தனது15-வது 'டிஸ்கவறர்' ஏவாயுதத்தை வானவெளிக்கு அனுப்பியது. இதுஎடுத்துச்செல்லும் 'கப்சியூல'பெட்டி முந்தியவற்றைப் போல் வெற்றிகரமாக மீண்டும்வந்து சேருமானால் அடுத்தமாதம் அனுப்பப்படும் 16-வதுஏவாயுதத்தில் உயிருள்ள குரங்குஒன்று வைத்து அனுப்பப்படுமாம்.

● அர்ச். பேதுருவானவர் மகா தேவாலயத்திலே சமீபத்தில் அருளப்ப பாப்பரசர் அளித்த பேட்டி ஒன்றில், செஞ்சீனாவின் வேதவிரோத ஆட்சியாளர்கள் "கசப்பான காலங்க"ளைக் கண்டுகொள்வார்களென்று தீர்க்கதரிசனம்போன்று முன்னதாகத் தெரிவித்திருக்கின்றார். "கோவிலுக்குப்போவதற்கும் ஒருவர் அனுமதிச்சீட்டு வேண்டப்படுகிறார்" என்று கம்யூனிஸ்த சீனாவிலிருந்து சமீபத்தில் திரும்பிய ஒருவர் தமக்குத் தெரிவித்ததாகவும் அவர் கூறலாயினர்.

## ஐக்கியநாடுகள் மகாசபை

ஐக்கியநாடுகளின் ஸ்தாபனமகாசபையின் 15-வதுகூட்டம்சென்ற 21-ந்திகதியன்று நியூயோக்நகரில் ஆரம்பமானபோது, அதன்புதியதலைவராக அச்சபையிலே அயர்லாந்தின் பிரதிநிதியாய் இருந்துவருகிறவரான திரு. பிறெடறிக் எச். போலன்ட் தெரிவுசெய்யப்பெற்றிருக்கின்றார். இவருக்கு 46வாக்குகள் — அதாவது குறைந்தபட்சம் தேவைப்படுவதிலும் இவருக்குக் கூடுதலாக 5வாக்குகள் கிடைத்தன. இவருக்குமுன் 14-வதுகூட்டத்தின் தலைவராய் இதுவரை இருந்துவந்தவர் பெருநாட்டைச்சேர்ந்த டக்றர் விக்றர் அந்திரேயோ பெலோன்டிஎன்பவரே. பிரான்ஸின் ஆதீனத்திலிருந்து சுதந்திரமடைந்த 13ஆபிரிக்கநாடுகளும், சைப்பிறஸ்தீவும் ஐக்கியநாடுகளின் ஸ்தாபனத்திலே புதியஅங்கத்துவநாடுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

* * *

● ஆபிரிக்காவிலே உகண்டாநாட்டு வேதசாட்சியும், 1920-ம்ஆண்டு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளப்பட்டவருமான முத். சாள்ஸ் லுவாங்கா விரைவிலே ஆபிரிக்காவின் இக்கால முதலாவது அர்ச்சியசிட்டவராவார்போல் இருக்கிறது. தனது நாட்டிலிருந்து கிறீஸ்துவேதத்தை ஒழித்துவிடுமாறு முவான்காஎனும்மன்னன் இவரையும், மற்றும் சுமார் 100 ஆபிரிக்கரையும் 1886–ம்ஆண்டு உயிரோடு சுட்டெரித்தான்.

● கடல்நீரைச் சுத்திசெய்து நல்ல குடிதண்ணீராக்கும்கருவிஒன்று கருங்கடலிலே பிரயாணஞ்செய்யும் சோவியற்ரூஷிய கப்பலொன்றில் சித்திகரமாக இயங்குவதாகச் செய்திகிடைத்திருக்கிறது. இது மணிஒன்றுக்கு 875 பைந்து குடிதண்ணீரை வடித்துத் தருகிறதென்றும், இந்தக்கருவி பெருவாரியாகச் செய்யப்பட்டபிறகு நெடுந்தூரம் பிரயாணஞ்செய்யும் கப்பல்கள் குடிதண்ணீரை எடுத்துச்செல்லவேண்டியதில்லையென்றும் சொல்லப்படுகிறது.

## அமெரிக்கரின் தேநீர்ப்பாவனை

நிகழும் 1960-ம்ஆண்டின் முதல்ஏழு மாதகாலத்திலும் ஐக்கியஅமெரிக்க தேசத்தில் தேயிலைஇறக்குமதி 7கோடியே 135லட்சம்ருத்தலாக அதிகரித்திருக்கிறதென்றும், இத்தொகை முந்தியவருடத்தின் அதேகாலஎல்லையில் இறக்குமதியான தேயிலையிலும் 74லட்சம்ருத்தலால் அதிகரித்துள்ளதென்றும் அமெரிக்க தேயிலைச்சங்கம் அறிக்கைபிட்டிருக்கிறது. இவ்வருடத்திலே அத்தேசத்தில் தேயிலையின் மொத்த இறக்குமதி முன்னில்லாத பெருந்தொகையாய் 11கோடியே 70லட்சம்ருத்தலாக அதிகரிக்கும் — அதாவது சென்ற 1959-ம் ஆண்டைக்காட்டிலும் 90லட்சம்ருத்தல் கூடுதலாயிருக்குமென்று அரசாங்கம் மதிப்பிட்டிருக்கிறது. அத்தேசத்தால் இறக்குமதிசெய்யப்படும் தேயிலையில் ஒருநியாயமான விகிதம் இலங்கைத்தேயிலையாகும்.

* * *

● இந்தியாமுழுவதிலும் சீனஒற்றர்கள் உளவறிந்துவருகின்றார்கள்; அவர்களுக்கு இந்தியாவிலுள்ள சீனமக்கள் உதவிசெய்கிறார்களென்று திபேத்திய பாதுகாப்புப்பகுதியின் முன்னாள் உதவித்தலைமை அதிகாரியான திரு. தோண்டப் சமீபத்திலே அறிவித்துள்ளார். இது உண்மைதானாஎன்பதை இந்தியஅரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்துவருகின்றது.

● புதுவையில்நடைபெற்ற பரிசோதனையிலிருந்து சங்கீதத்தின்மூலம் தாவரவளர்ச்சி அதிகரிப்பதுசாத்தியமென்று நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்திலே இப்பரிசோதனை நெற்பயிரில் நடத்தப்பட்டபோது விளைவுபெருமளவில் அதிகரித்தது. இனிக் கடலை, மரவள்ளிக்கிழங்கு, கரும்பு முதலியவற்றிலே இப்பரிசோதனை நடத்தப்படவிருக்கிறது.

● மாத்துண்டுகளிலிருந்து செய்யப்பட்ட எழுத்துகள்கொண்டு திபேத்திய பாஷையில் அச்சிடப்பெற்ற புராதன புத்தகம்ஒன்றையும், 14-ம்நூற்றாண்டிலே நேப்பிள்ஸ்நகரில் கையாலெழுதி அழகுபடுத்தப்பட்ட வேதாகமத்தின் பதனிட்ட தோற்பத்திர பதிப்பின் இருபுத்தகங்களையும் பரிசுத்தபாப்பரசர் வத்திக்கான்நூல்நிலையத்திற்கு உபகரித்திருக்கின்றார்.

● 1959-ம்ஆண்டிலே பாவனைக்கு விடுக்கப்பட்ட சமயசம்பந்தமான தலைசிறந்த தபால்முத்திரையை வெளியிட்டதற்காக வத்திக்கான் இராச்சியத்திற்குச் சமயசம்பந்தமான தபால் முத்திரைகளைச் சேகரிக்கும், அர்ச். கபிரியேலின் உலகஐக்கியசங்கமானது 'டிப்ளோமா' வழங்கியிருக்கிறது. இந்த முத்திரை திவ்வியகர்த்தரின் திருஜனனத்திற்கு அர்ப்பணஞ்செய்யப் பட்டதாகும்.

● இன்றையஉலகில் மிகப்பெருந்தொகையானோரை மனந்திருப்பியவர்களில் ஒருவரான வண. பேட்றன்ட் கொன்வேசுவாமியார் சமீபத்திலே நியூயோக்நகரில் காலஞ்செல்லலாயினர். கடந்த 40வருடங்களிலும் இவர் தமது சொற்பொழிவுகளாலும், ஞானத்தியானங்களாலும் ஆறாயிரம்பேருக்கு மேற்பட்டவர்களை மனந்திருப்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்த்திருக்கின்றார்.

● 1676-ம்ஆண்டுமுதல் 1689-ம் ஆண்டுவரை திருச்சபையை ஆட்சிசெய்தவரும், 1956-ம் ஆண்டு 12-ம் பத்திநாத பாப்பானவரால் முத்திப் பேறுபெற்றபட்டம் அருளப்பெற்றவருமான 11-ம்இன்னோசெந்து பாப்பானவருக்கு அர்ச்சியசிட்டபட்டம் சூட்டும் விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் சமீபத்தில்கூடிக் கலந்துவிவாதித்திருக்கிறது. வேதவிசுவாசத்தின் புனிதத்தைப் பாதுகாப்பதற்கும், விசுவாசிகள் அடிக்கடி திவ்வியநன்மை பெறுவதற்கும், திருச்சபையின் உரிமைகளைப் பாதுகாப்பதற்குமாக இவர் வேகமாக உழைத்துவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாலையில் எங்கே போகிறான்?

(முன்தொடர்ச்சி)

ஆபேல்தாத்தா ஒருநெடுமூச்சுடன் பாவசங்கீர்த்தனத் தட்டியைவிட்டு எழுந்தார். ஏதோநெடுநாட்பட்ட பெரும்பாவச்சுமையொன்றை இறக்கிவிட்டு எழுந்தவர்போல் மனநிம்மதியுடன் நடந்துசென்று அங்கிருந்த ஓர் ஆசனத்தில்போய் அமர்ந்தார். அவர் மனதில் அமைதியும், வதனத்தில் சமாதானத்தின் அறிகுறியும் காணப்பட்டன. அங்கே சிறிதுவேளை யாதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தபின் அவர் கோவிலை விட்டு வெளிகொண்டதே காணமற்போன ஆட்டைக் கண்டடைந்தாற்போன்று ஆனந்தங்கொண்ட அந்த நல்ல ஆயரான சுவாமியார் கோவில் வாயிலில்நின்று அன்புபெருக அவரை வரவேற்றார். அவருக்குக் கைகொடுத்தார். தம்முடையவீட்டுக்குத் திரும்பி வந்தஊதாரிப்பிள்ளையை எதிர்கொண்டு சென்று கட்டிஅரவணைத்துக்கொண்ட பிதாவைப்போன்று அவரை இருகரங்களாலும் வாரியணைத்துக்கொண்டு குருமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கே சிறிதுவேளையில் பாலும், காப்பியும், பழவகைகளும் அவரைவரவேற்றன. அதன்மேல்இருவரும் கால்மணிநேரம்வரை சம்பாஷித்தனர். கடைசியாகச் சுவாமியாரிடம் விடைபெற்றுக்கொண்டு அவர் தனது வாசஸ்தலத்தைநோக்கிப் பதமையாக நடைகொண்டார்.

போகும்போது அவர் உள்ளத்தில் பலவித சிந்தனைகளும் அலையலையாயெழுந்து கரைமோதியவண்ணமிருந்தன. ஒருகால் பாலியன்பேணுட்டும், மறுகால் பாலியயேசுவும் அவரதுமனக் கண்முன்பாக மாறிமாறிக் காட்சியளித்துக் கொண்டிருந்தனர். அன்றுகாலை நடைபெற்ற அந்தச் சிறியஊர்வலம் அவர்உள்ளத்தில் பெரும்அதிர்ச்சியையும், பத்தியருட்சியையும் உண்டுபண்ணிக் கொண்டிருந்தது. எதிர்பாராத விதமாய் இறைவன் தனக்குச்செய்தருளிய இணையற்ற பேருபகாரத்தை உள்ளூறநினைந்துநினைந்து உள்ளங்கசிந்துருகியபடியே அவர் தமதுமனையின் வாயிற்படியை அடைந்தார்.

அப்போதுகடிகாரம்பத்துமணிஅடித்தது. அறையினுள் பிரவேசித்துத் தனதுஉடைகளை அவசரம்அவசரமாகக் களைந்தார். அதன்மேல் பழங்காலப் பெட்டகம்ஒன்றைத்திறந்து அதிலிருந்து சித்திரவேலைப்பாடமைந்த சிறிய வெண்கலச்சிமிழ்ஒன்றை எடுத்துக் கொண்டுபோய் மேசையில்வைத்துத் தூசியைத் துடைத்துவிட்டு அதனை மெதுவாகத் திறந்தபோது அதனுள் அழகியதோர் வெள்ளிச் செபமாலை காணப்பட்டது. அதைக்கண்ணுற்றதே அவருடைய கண்கள்இரண்டும் கலங்கின. கலங்கியகண்களிலிருந்து கண்ணீர் துளிதுளியாய்ப் பெருகத்தொடங்கியது. தன்னைஅறியாமலே அவர்வாய்விட்டு அம்மாவென்று அலறத்தொடங்கினார். ஆம், அது ஆபேல்தாத்தாவின் அரும்பெரும்பொக்கிஷம். அவருடைய மனையின் சுவர்களையும், தளங்களையும் அலங்கரித்துக் கொண்டிருக்கும் சகல பொக்கிஷங்களிலும் அதிகம்விலையேறப் பெற்ற ஆத்மீகபொக்கிஷம்.

அவர் ஓர்பாலியனாயிருந்தபோது, மரணத்தருவாயிலிருந்த அவருடைய அன்னை ஓர் அன்பளிப்பாக — அரியபாதுகாப்பாக — தனதுநினைவின் அழியாச் சின்னமாக அவருக்கு அளித்துவிட்டுப் போன மணிமாலையாகிய ஞாபகார்த்த செபமாலை. "மகனே! நீ ஒருகுழந்தையாய் ஓடியுலாவித் திரிந்தபோது உனதுஅப்பா இறந்துபோனார். அதனால்நாங்கள் ஆருமற்றபரதேசிகளாய்த் தனிக்கவிடப்பட்டோம். தரித்திரத்தின் வாய்ப்பட்டுத் தவித்தோம். உயிர் பிழைக்க வகையறியாது தத்தளித்தோம். என்றாலும் மகனே, உன்னை வளர்த்து ஒருஆளாக்கிப்போடவேண்டுமென்று பசிபட்டினிகாத்து, எண்சாண்உடம்பு ஒருசாண்உடம்பாகும்படியாக அரும்பாடுபட்டுழைத்துவந்த உன்தாய் இன்று மரணப்படுக்கையில் கிடக்கின்றாள். என் அந்தியவேளை இதோஅண்மிவிட்டது. இன்னும்சில மணிநேரத்தில் என்உயிர் எனதுஉடலை விட்டுப் பிரிந்துவிடும். அத்தோடுநான் உலகிலுள்ள எனது ஒரேயொருசெல்வசம்பத்தான உன்னையும், இந்தஉலகையுமேவிட்டு நான் பிரிந்துவிடுவேன். அப்போது என்ஆருயிர்க்குழந்தாய், இந்த வையகத்தில் ஓர்அனாதையாக நீ கைவிடப்படப்போகிறாயே என்பதை நினைக்குந்தோறும் என்மனம்அனலாய்ப் பற்றியெரிகின்றதே! என்செய்வேன்? உன்தாய் உயிரோடிருந்து உன்னைப்பேணிப்பாதுகாத்துவர நீகொடுத்துவைக்கவில்லை. எல்லாம் இறைவன்செயல். அவனின்றி அணுவுமசையாது. ஆயினும் என்செல்வமகனே! நீஒன்றுக்கும் கலங்கவேண்டியதில்லை. கவலைப்படவேண்டியதில்லை. அஞ்சலென்று சரணடைந்தவர்களை அஞ்சேலென்றுதஞ்சம் அளிக்கும் எமது பரலோகஅன்னையின் பாதுகாவலில் மகனேஉன்னைஒப்படைக்கின்றேன். இன்றுவரை நான்கையெடுத்துச் சொல்லிவந்த இந்தவெள்ளிச்செபமாலையை என் ஞாபகமாக உனக்குக் கையளிக்கிறேன். இதைநீபெற்று அன்னையின் செபமாலையை அனுதினமும் சொல்லிவரத் தவறாதே. நீ அவ்வாறு செய்துவருவாயென்பதற்கு உறுதிவாக்களித்து உனதுஅன்னைக்குக் கடைசிமுறையாக ஒருமுத்தங்கொடுஎன்று அவள் உருக்கமாகக் கூறியமொழிகள் அப்போதேகேட்டதுபோல் அவர்செவிகளில் தொனிக்க, அழுதுகொண்டே அந்தச் செபமாலையைஎடுத்து ஒருமுறைக்குப் பலமுறை அதனைமுத்தமிட்டார். தனது இருகண்களிலும்வைத்து ஒத்தினார். பின்னர் ஒருபெருமூச்செறிந்து ஐயோ, பெற்றதாய்க்கு அளித்தஉறுதிவாக்கை நிறைவேற்றாதுபோன பெரும்பேதையானேனென்று பிரலாபித்தார். என்றாலும் இனிமேலாவது செபமாலைசொல்லி வருவதாகத் தன்னிலே திடசங்கல்பம் செய்துகொண்டார். அதன்மேல் கையில் எடுத்த செபமாலையைத் தனதுகழுத்தில்போட்டார். ஆயாசமேலிட்டவராய் மெதுவாகநடந்துசென்று தனது படுக்கையில் சரிந்தார். அயர்ந்து நித்திரை போயினார்.

அயர்ந்து நித்திரைபோனஅவர் ஐந்துமணிக்குப் படுக்கைவிட்டெழுந்தார். கொஞ்சம்அப்பமும், தேநீரும்அருந்திவிட்டு மாதாவின் பெரியபடம்ஒன்றைத் தனது மேசைக்குமேலாக ஒருதட்டிலே பூச்சியமாகவைத்தார். சிலபுஷ்பங்களைக் கொய்துவந்து அதற்குச்சாத்தினார். தீபமேற்றினார். அப்போது பொழுதும் அஸ்தமித்துவிட்டது. மாதாவின் படத்தின்முன்பாக முழந்தாட்படியிட்டார். செபமாலையைக் கையிலெடுத்தார். கரங்கள்இரண்டையும் நீட்டியபடியே ஒவ்வொரு பிரியதத்தமந்திரத்தையும் அழுத்தந்திருத்தமாகவும், பக்தியுருக்கமாகவும் சொன்னார். பலவருடங்களுக்குப்பிறகு ஆபேல்தாத்தாசொன்ன முதற்செபமாலை அதுவாகும்.

செபமாலை முடிந்தது. மெல்லஎழுந்தார். இராப்போசனத்தை முடித்துக்கொண்டு சிறிதுவேளை செபமாலையும்கையுமாக உலாவிவிட்டுப் படுக்கையண்டை சென்றார். வழமைபோலச் சரிந்துபடுத்தார். ஆனால், நெடுநேரஞ்சென்றும் நித்திரை அவரைஎட்டிப்பார்க்கவில்லை. அப்பொழுது ஏதோஓர்எண்ணம் மனதில்எழவே எழுந்துசென்று தனது அலுமாரியைத் திறந்தார். அதிலே பலநாள் கைதொடாது கைவிடப்பட்டிருந்த சுவிசேஷப்புத்தகத்தைக் கையிலெடுத்தார். எடுத்துக்கொண்டு தனதுபடுக்கைக்குச் சென்றார். தீபத்தைஏற்றிவிட்டுப் படுக்கையில் சரிந்தபடியே புத்தகத்தைத் திறந்தார். திறந்ததும் அதில் இடதுபக்கமாகவிருந்த மேல்வசனங்களைப்படித்தார். படித்ததே அவர்பெரிதும் உணர்ச்சிவசப்பட்டார். அத்துடன் ஒருவிததிகிலும் அவருக்கேற்பட்டது. அவ்வசனங்களை இரண்டொருதரம் திரும்பவும் படித்தார். படித்ததும் புத்தகத்தைமூடிவிட்டுச் சிந்தனையில்ஆழ்ந்தார். அவைகள்வருமாறு:

"பூலோகத்தில் உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம். இங்கே அந்தும், துருவும் அரிக்கின்றது. திருடரும் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். ஆனால், பரலோகத்தில் உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள். அங்கே அந்தும், துருவும் அரிக்கிறதுமில்லை. திருடர் அங்கே கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை. ஏனெனில், உன்பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கேயே உன் இருதயம் இருக்கின்றது."

(தொடரும்)

> "ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."

# தாம் ஓர் கிறீஸ்துவர்தானா?

(முன்தொடர்ச்சி)

கடைசியாக மர்த்தீனாள் தனதுபெற்றோரையும், அருமைச்சகோதரனையும் பிரிந்துபோகவேண்டியவேளை அண்மியது. மின்னிக்குமுறி மழைபெய்வது போல விம்மலபொருமல்களின் மத்தியிலே அவர்களதுகண்களிலிருந்து கண்ணீர்பெருகத் தொடங்கியது. மர்த்தீனாள் அப்பாஎன்றாள். அம்மாஎன்றாள். அண்ணா என்றாள். ஈற்றில் நான் போய்வருகிறேன்என்று இருகன்னங்களிலும் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு உருக்கமாக மொழிந்தாள். உங்களையெல்லாம் விரைவிலே மோட்சத்தில் சந்திப்பேனென நினைக்கிறேனென்று உற்சாகத்துடன்பகர்ந்து இருகரமெடுத்து அவர்களை வணங்கினாள். அப்போது அவர்கள்மூவரும் கண்ணீர்பெருக அந்தச் சிறிய வேதசாட்சியைக்கட்டியணைத்து முறையே முத்தமிட்டார்கள். இந்தக் கண்ணுருவியானகாட்சியைக் கண்ணுற்ற படைத்தலைவனே கண்கலங்கிக் கதிகலங்கி நின்றானெனில் பின்னர்பேசுவானேன்?

தனதுபெற்றோரினதும், சகோதரனினதும் கலங்கியநிலையைக் கண்ணுற்ற மர்த்தீனாள் அவர்களைநோக்கி, "அப்பா! அழவேண்டாம், அம்மா! அழவேண்டாம், அண்ணா! அழவேண்டாம்; என்னோடுநீங்களும் சந்துஷ்டிகொள்ளுங்கள்! சந்தோஷங்கொண்டாடுங்கள்! என்னைவரவேற்பதற்குப் பரலோகவாசல் அதோ! திறந்தாற்போல் எனக்குத் தோற்றுகின்றது; அங்கே நாம்அனைவரும் ஒன்றாகக்கூடி நித்தியகாலமும் கிறீஸ்துநாதரோடு நிலையாக வாழ்ந்திருப்போம்" என்று ஆறுதல்கூறியபோது, படைத்தலைவன் அவளை விழித்து, "இனிமேல்ஒருகணமும் நான் தாமதிக்கமாட்டேன்; இந்த மட்டும் பொறுத்ததுபோதும்போதும்; பெண்ணே புறப்படு" என்று சிங்கம் போன்று கர்ச்சனைசெய்தான்.

இதுகேட்டமர்த்தீனாள் தாமதமின்றியே வெளிகொண்டாள். அவளின் பின்னால் மனையின்வெளிவாயில் வீதிவரையிலே பெற்றாரும், சகோதரனும் சென்றார்கள். ஆனால், அவர்கள் அவளைப்பின்தொடரப் படைத்தலைவன் முன்போல அனுமதிக்கவில்லை. மர்த்தீனாள் மற்றுமோர்தரம் இருகரம் கூப்பி அவர்களுக்கு வணக்கஞ்செய்துவிட்டுப் போர்வீரரும், அவர்கள்தலைவனும் உருவியவாளுடன்புடைசூழ்ந்து செல்ல அவர்களுடன் புறப்பட்டுச் சென்றாள். கண்ணீரோடும், கம்பலையோடும் கண்ணுக்கெட்டுகிற தூரம் வரையிலே அவளைக் கண்ணோக்கியபடியே நின்றுவிட்டுக் கவலையே குடிகொண்டவர்களாய் அவள்தந்தையும், தாயும், சகோதரனும் மனையுள் பிரவேசித்தார்கள். அன்று அவர்கள்மனம் பட்டபாடோ இம்மட்டென்று சாற்றுந்தரமன்று. ஓர்மணிச்சுடரேபோன்று தீயஸ்பிரபுவின்மனையை விளக்கிக் கொண்டிருந்த மர்த்தீனாள் வெளிகொண்டதே அலங்காரமிக்கஅம்மனை அழகும், ஒளியும்குன்றியதாய், இருள்சூழ்ந்ததாய்க் காட்சியளிக்கத் தொடங்கியது. புதல்வியின் பிரிவையிட்டுப் பிரபுவும், [illegible] வாய்த் [illegible] அவள் பரலோகத்திலே கன்னியர்களான வேதசாட்சிகளின் குழுவில் சேரப்போவதையிட்டு மனஆறுதலும், சந்தோஷமும் அடைந்தார்கள்.

போர்வீரரும், படைத்தலைவனும் உருவியவாளுடன் புடைசூழப் பாதசாரியாய்ப் பாவைமர்த்தீனாள் ஆனந்தமாகநடந்துசெல்வதைக் கண்ணுற்ற வழிப்போக்கரும், ஏனையவர்களும் ஆச்சரியவசத்தராய் ஒருவரையொருவர் விழித்து, அவளைப்பாருங்கள்! அன்ன நடையைப்பாருங்கள்! அழகியகூந்தலை — அலங்கார உடையைப் பாருங்கள்! அவள் வதனத்தில்தவழும் புன்னகையைப் பாருங்கள்! ஒருநல்லஇடத்துப் பிள்ளையைப்போல் இருக்கிறாளே! அவள் என்னகுற்றம் புரிந்தாளோ! என்றெல்லாம் சொல்லிப் பரிதபித்தார்கள். இவ்விதம் பார்த்தவர்களெல்லாம் பரிதபித்திரங்க மர்த்தீனாள் உள்ளமே கலங்காது உற்சாகமாக நடந்துசென்று அரசமாளிகைபோய்ச்சேர்ந்தாள்.

மர்த்தீனாள் தங்கள்மனையைவிட்டுப் புறப்பட்டுச்சென்ற அன்றுபகல்முழுவதும் பிரபுதம்பதிகள் அவளைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தார்கள். தான் இரையாகப்போடப்படும்கொடிய சிங்கங்களுக்குஎட்டுணையுமே அஞ்சாது இறுதிவரை திடவிசுவாசமாய் அவள் இருக்க அருள்பாலிக்குமாறு வானத்தைஏறெடுத்துப் பிரார்த்தித்தவண்ணம் இருந்தார்கள். அவள்பக்கத்திலிருந்து தென்பளிக்குமாறு அவளுடைய காவற்சம்மனசானவரையும மன்றாடினார்கள். ஒன்று, இரண்டு, [illegible] மணித்தியாலங்கள் ஒன்றொன்[illegible] கழிந்துகொண்டேயிருந்தன. அருமை மகளைப்பற்றிய ஏதாவது செய்திகிடையாதோவென்று அவர்களுடைய மனங்கள் இடையிடையே அங்கலாய்த்தன. ஆனால், அவர்களின் மனை கட்டுக்காவலில் இருந்தமையால் எவருமே வெளிகொள்ளவும், உட்செல்லவும் முடியாதிருந்தது. இந்தநிலைமையிலே கடைசியாகச் சூரியனும்மேல்திசையை அடைந்தான். எங்கும் இருள்கவியத் தொடங்கியது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**ஐப்பசி — 1960**

| | | |
|---|---|---|
| ச. | 1 | மரியாயின்சனி (அர்ச். றெமிசியார் ஞா.) [வெ] |
| ஞா. | 2 | பெந்தக்கோஸ்தின் பின் 17-ம் ஞாயிறு (காவலான சம்மனசுகளின் ஞா) (வி. ம.) [ப] |
| திங. | 3 | வேதபோதக நாடுகளின் பாதுகாவலரான அர்ச். சின்னத் தெரேசம்மாள் (வி. ம.) [வெ] |
| செ. | 4 | அர்ச். பிரான்சீஸ்கு அசீசியார் [வெ] |
| புத. | 5 | காலதினம்(ஞாயிறுபூசை) அர்ச். (பிளாசிதப்பர் தோழர் ஞா.)[ப] |
| வி. | 6 | அர்ச். புறூனோ [வெ] |
| வெ. | 7 | திருச்செபமாலைத் திருநாள் (அர்ச்.மாற்கு ஞா.)[வி. ம.] [வெ] |

சத்திய வேத

**பாதுகாவலன்**

1960-ம் ஆண்டு
புரட்டாசிமாதம் 29-ந் திகதி

## பாப்பரசரது அன்பின்தூது

விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் தலைவரான கருதினுல் அகஜியானியன் ஆண்டகை அவர்களின் இலங்கைவிஜயமும் எமதுநாட்டின் பெருமைவாய்ந்த திருச்சபைச்சரித்திரத்தில் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத் தகுந்தனவாகும். அன்றுபுதன்கிழமை கொழும்பு, சஞ்சூசையப்பர்கல்லூரிமைதானத்திலே தமக்கு அருளப்பெற்ற சம்பிரமமான வரவேற்புஉபசாரத்தின்போது ஆண்டகைஅவர்கள் நிகழ்த்திய பொன்னுன உரைகள் இந்நாட்டிலுள்ள கத்தோலிக்கமக்களுக்கு மாத்திரமல்ல, இந்நாட்டுமக்கள் அனைவருக்குமேஅருமருந்தன்னபொன்மதிகள் பொதிந்தனவாகும். மிஷனரியஉலகின் தலைவரை — எவரையுமே தம்பால் ஈர்ந்து கொள்ளவல்ல குணுதிசயமும், வசீகரத்தன்மையும்வாய்ந்த திருச்சபையின் இளவரசர்ஒருவரைத் தங்கள்மத்தியில் வரவேற்கக் கிடைத்ததையிட்டு இலங்கைக் கத்தோலிக்கமக்கள் அடைந்த குதூகலமோ இம்மட்டன்று.

ஆண்டகைஅவர்களைக் கண்ணுரக்கண்டுகொள்ளும் சலாக்கியத்தைப்பெருத பல்லாயிரவரான கத்தோலிக்கமக்களோ உலகிலுள்ள மிஷன்நாடுகளுக்கெல்லாம் பரிசுத்தபிதாவின் பதிலாளியான கருதினுல்ஆண்டகை எம்மத்தியில்வந்தார்; எம்முடன் சம்பாஷித்தார்; இலங்கைக் கத்தோலிக்க ரென்றமட்டிலே எம்முடன்சம்பந்தப்பட்ட ஒவ்வோர் கருமத்திலும் நிறைந்தகரிசனை எடுத்துக்கொண்டார் என்றெல்லாம் சிந்தித்துப் பெருமகிழ்ச்சி அடைந்தார்கள்.

மேலும் ஆண்டகைஅவர்களின் தரிசனையானது எமதுநாட்டிலே ஏதோநவமான சரித்திரகாலம் ஒன்றினை ஆரம்பிப்பதாகும். இச்சம்பவம்கொண்டு வரப்போகும்வருடங்களிலே திருச்சபையின்சரித்திரம் கணிக்கப்படும். நமது கத்தோலிக்கவாழ்க்கைக்கும், நமதுஐக்கியத்துக்கும், பூமியிலே கிறீஸ்துநாதரின் பதிலாளியானவருக்கு நமதுவிசுவாசபிரமாணிக்கத்துக்கும் இது ஒரு தூண்டுகோலாகும். இத்தகைய மகான்ஒருவரது தரிசனையின்பின் கத்தோலிக்கராகியநாம் தேவனுக்கும், நாட்டுக்கும் முன்னிலும் அதிக உதாரசிந்தை காண்பிக்க வேண்டும். பேதுருவென்னும்கல்லுக்கு முன்னிலும் அதிக ஐக்கியமும், விசுவாசபிரமாணிக்கமும் காண்பிக்கவேண்டும்.

அவர் விமானநிலையத்தில் பேசிய முதல்வார்த்தையில் தானே ஒருகாரியம் பிரத்தியட்சமாகின்றது. அதாவது "பரிசுத்த பாப்பரசரிடமிருந்து அன்பின் தூதாக நாம்வந்திருக்கிறோம்" என்பதே. அதுமுதல் அவர் பேசிய ஒவ்வொருவசனமும், அவர்நிகழ்த்திய ஒவ்வொருபேச்சும் அன்பையே தொனித்துக்கொண்டிருந்தன. "கத்தோலிக்கமக்கள் தங்கள்தாய்நாட்டுக்குச் சேவைசெய்யும்பொழுது தங்கள்திருச்சபையின் கற்பனைகளுக்கு மகாபிரமாணிக்கமுள்ளவர்களாய் இருக்கின்றார்கள்; ஏனெனில், ஓர்உத்தம கத்தோலிக்கனுகஇருப்பதுஎப்பொழுதும் ஓர்உத்தமபிரசையாய் இருப்பதாகும்" என்று அவர் கூறிய பொன்மொழிகள் இந்நாட்டிலுள்ள சாதிய,சமய, அரசியல் தலைவர்கள் அனைவராலும் ஊன்றிஆலோசிக்கப்பட வேண்டியனவாகும்.

---

### மந்திரியின் யாழ்ப்பாணவிஜயம்

தலதாபனமந்திரியான திரு. மகாநாம சமரவீரா வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதியன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ்செய்ய விருக்கின்றார். அதிகாரபூர்வமாக இங்கு விஜயஞ்செய்யும் இவர் யாழ்ப்பாணமாவட்டக் கிராமச்சங்க தலைவர்களின் மகாநாடொன்றில் கலந்துகொள்ளவிருக்கின்றார்.

### றெயின்களுக்குப் பலியானவர்கள்

சென்ற1959-ம்ஆண்டிலே றெயின் வண்டிகள் மோதியகாரணமாக 130பேர் இறந்தனரென்றும், இவர்களில் 70பேர் தற்கொலைசெய்தனரென்றும் றெயில்வே ஜெனறல்மனேஜர் சென்ற ஆண்டிற்கான தமதுஅறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். இன்னும் பிஷ்பிளேற்றுகளை நாசவேலைகாரர் அகற்றியதால் இருபெரிய றெயில்வேவிபத்துகள் சென்றவருடத்தில்நிகழ்ந்து, இவற்றில் ஒருவர் இறக்க, 31பேர் காயமடைந்தனரென்றும், சென்றவருடம் றெயில்வேக்கு 2கோடியே 91லட்சத்து 69ஆயிரத்து 666ரூபா நஷ்டமேற்பட்டதென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

### பயங்கர கார்விபத்து

கொழும்பிலே கறுவாக்காட்டுப் பொலிஸ்ஸ்ரேஷனுக்குஎதிரே சென்ற வியாழக்கிழமைகாலை 10மணிக்குஏற்பட்ட பயங்கரமான கார்விபத்தின்போது அதில்சென்ற திரு. கிறஹம் டி. பின்ரோ, திரு. ஏ. நாகேந்திரா, திரு. கே. எச். ஆனந்தசந்திரசேனு எனும் அப்புக்காத்துமார்மூவர் அந்தஸ்தலத்திலேயே மரணமடைந்தனர். இவர்கள் மூவரும்தெஹிவலையைச் சேர்ந்தவர்கள். அதேகாரில் பிரயாணஞ்செய்த கொழும்புப்பிரதமநீதிபதி திரு. என். ஏ. டி. எஸ். விஜயசேகரா பலத்தகாயமடைந்து, பிரக்ஞையற்றநிலையில் உடனே கொழும்பு அரசினர்பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப் பெற்றுச் சத்[illegible] இப்போது குண[illegible]



## சதாசகாயமாதா கோணம்

—:—

(முன்தொடர்ச்சி)

தானிருந்தகதிரையை எனக்குக் கிட்டஇழுத்து, சிறிதுநடுக்கத்துடன் கையை எனதுமுழந்தாளில்வைத்து, "சுவாமி! எல்லாப்பாவங்களும் மன்னிக்கப்படும்என்று நீங்கள்உண்மையாகவே நம்புகிறீர்களா? நேர்மையாகச்சொல்லுங்கள்" என்றார்வயோதிபர்.

"நிச்சயத்தில் நிச்சயமாக நம்புகிறேன்; தேவஇரக்கம் அளவுகடந்தது. அதிசயமானது. பாவியின் இருதயத்தில்புக அது எந்நேரமும் ஆவலாகவும், ஆயத்தமாகவும் இருக்கிறது. அவரின் இருதயகபாடத்தருகேநின்று தட்டுகிறது" என்றேன்.

"தேவகோபத்தைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்"என்றுகேட்டார்.

"தேவகோபம் மிக்கபயங்கரமானது. தேவனின் அளவில்லாத இரக்கமொன்றைத்தவிர வேறெதுவும் அதைமேற்கொள்ள முடியாது. மனஸ்தாபப்படும் எந்தப்பாவியையும் கட்டிஅரவணைக்க அவர் தமதுகரங்களை விரித்துக்கொண்டிருக்கிறார். தமதுஅன்பையும், இரக்கத்தையும் வேண்டியமட்டும் அபரிமிதமாகச்சொரிய ஆயத்தமாகவிருக்கிறார். நூறுநீதிமான்கள் தங்கள்நன்மைத்தன்மையில் நிலைத்திருப்பதைப் பார்க்கிலும் ஒருபாவி மனந்திரும்பும்போதுமோட்சத்தில் அதிகசந்தோஷம் உண்டாகிறது" என்றுசொன்னேன்.

நான் கதைத்துக்கொண்டிருந்தபோது வயோதிபரின்முகத்தில் ஒரு விதபிரபை தோன்றியது. அவர் இமைகொட்டாது என்னையே சற்றுப்பார்த்துக்கொண்டிருந்தார். தனதுநீண்ட வெள்ளைத்தாடியையும் இடையிடையே தடவிக்கொண்டிருந்தார். "நான் அடையும்நன்மைக்கு நீதான்கால்" என்று அவர் தாடிக்குச் சொல்லுவதுபோல எனக்குப்பட்டது.

நமதுபேச்சு முடிந்து நான்புறப்பட எழும்பியபோது நேரம்7மணியாகிவிட்டது.

"உங்களோடு இன்னும்கதைக்க வேண்டிய இரண்டொருவிஷயம் இருப்பதால் நாளைக்கும் இப்பக்கம் வரமுடியுமோ?"என்று மிக்கஆவலுடன் கேட்டார்வயோதிபர்.

"நீர் எனக்கு ஒருஉதவிசெய்ய வேண்டும். அதற்குச்சம்மதித்தால் நாளைக்குத் திரும்பவும் இவ்விடம் வருவேன்"என்றேன்.

"என்னஉதவி?" என்றுகேட்டார்.

"இன்று இரவு நீர் படுக்கப்போகுமுன் ஒருசிறுசெபம் சொல்லுவதாக எனக்கு வாக்குப்பண்ணவேண்டும்" என்றுகேட்டுக்கொண்டேன்.

"செபமா? எனக்குத்தான் ஒரு செபமுந்தெரியாதே. நான்கடைசியாகச் செபஞ்சொல்லி எழுபதுவருடங்களாகின்றன. என்னிடம் செபப்புத்தகம்ஒன்றுமே இல்லை" என்றார்.

"என்சிநேகிதனே! உமக்குச் செபப்புத்தகம் தேவையில்லை. இன்று இரவு உமதுபடுக்கையண்டை முழந்தாளில் இருந்து [illegible] திருஇருதயமே! [illegible] இரக்கமாயிரும்" என்று மூன்றுதரமும், "சதாசகாயமாதாவே எனக்காக வேண்டிக்கொள்ளும்" என்று மூன்றுதரமும் சொல்லும்" என்றேன்.

"இவ்வளவுந்தானு? அதுமெத்த இலேசு. உங்களைப் பிரியப்படுத்துவதற்காக இந்தவார்த்தைகளைச் சொல்லுகிறேன். நீங்கள் நாளைக்குத் தயவுசெய்து இவ்விடம்வந்து என்னைச் சந்திக்கவேண்டும்"என்றார்.

அத்தோடு அவருடன் கைகுலுக்கிவிட்டு வெளிப்பட்டேன். அன்று பின்னேரத்து வேலையைப்பற்றி ஓர் அளவுசந்தோஷம் அடைந்தேன் என்று சொல்லவேண்டியதில்லை.

அன்று இரவு வயோதிபரின்உள்ளத்தில் பலத்தகுழப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம். சந்தோஷமோ, துக்கமோ தாண்டவமாடியிருக்கலாம். அவற்றைப்பற்றியது கடவுளுக்கும், அவருக்குமிடையிலுள்ள இரகசியம். மறுநாட்காலையில் திருஇருதயபீடத்திலும், சதாசகாயமாதாபீடத்திலும் இரண்டு அழகிய வயலெற்புஷ்பச்செண்டுகள் இருப்பதைக் கோயிற்சக்கிறிஸ்தாம் கண்டார்.

திவ்வியபூசைமுடிந்ததும் வயோதிபரின் இடத்துக்குச்சென்றேன். அவர் என்னை எதிர்கொண்டழைத்து ஆசனத்திருத்தினர். இரண்டுமணித்தியாலங்களாகச் சம்பாஷித்தோம். சம்பாஷணைமுடிந்து நான்புறப்படஆயத்தமானேன். திடீரெனவயோதிபர் எழுந்து, எனதருகில்வந்து, "சுவாமி இதற்குநான் ஒருமுடிவுகாணவேண்டும். முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். தயவுசெய்து இப்போதுதானே எனது பாவசங்கீர்த்தனத்தைக் கேளுங்கள்" என்றுசொல்லி முழந்தாளில் இருந்தார். தனதுபாவசங்கீர்த்தனத்தைத் தொடங்கினர். மனந்திரும்பி, உத்தம மனஸ்தாபத்துடன் தனதுபாவங்களைச் சொல்லும்போது வயோதிபரிடத்துக் காணப்பட்ட உணர்ச்சிபொருந்திய துக்கம் எவ்வளவோ அருட்சியையும், சந்தோஷத்தையும் கொடுத்தது.

மறுநாட்காலை திவ்வியபூசைக்கு வந்தார். திறமான புதியஉடைகள் அணிந்திருந்தார். அவருடைய கெம்பீரதோற்றத்தைப்பற்றியும், தாடியின் வடிவைப்பற்றியும் புகழ்ந்தேன்.

"எனது தாடியை நறுக்கிப் புனிதப்படுத்தக் கனநேரஞ் செலவழித்தேன். நான் இப்போது அடைந்திருக்கும் சந்தோஷத்துக்கும், மனச்சமாதானத்துக்கும் வழிகாட்டியது இந்தத்தாடிதான்" என்று சொல்லிச் சிரித்தார்.

"அது எப்படி?" என்று கேட்டேன்.

"அதுஎப்படிஎன்று கேட்கிறீர்கள்? வெகு சுலபமாகச் சொல்லிவிடுகிறேன் சுவாமி; நாம் முதன்முதற் சந்தித்தபோது நீங்கள் கடவுளைப்பற்றி, மோட்சத்தைப்பற்றி அல்லது நரகத்தைப் பற்றிப் பேசத்தொடங்கியிருந்தால் நிச்சயமாக உங்களை நிந்தித்துப்பேசி அவமானப்படுத்தியிருப்பேன். ஆனுல், நீங்கள் என்னுடைய தாடியை மெச்சிப் பேசத்தொடங்கவே அது எனக்குச் சந்தோஷத்தைக் கொடுத்ததுமல்லாமல் நீங்கள் என்ன கேட்டாலும் அதைக் கொடுக்கவோ, செய்யவோ ஆயத்தமாகவும் இருந்தேன்" என்று சொல்லிமுடித்தார்.

"என்னுடைய இரகசியத்தையும் நான் சொல்லிவிடுகிறேன்; உம்மைச் சந்திக்க வருமுன் நான் எடுத்துக் கொண்ட கருமத்தின் வில்லங்கத்தை நன்குணர்ந்து எனக்குவேண்டிய உதவி புரியும்படி யேசுவின் திருஇருதயத்திடமும், சதாசகாய மாதாவிடமும் வேண்டிக்கொண்டேன். "அவருடைய தாடியைப்பற்றியும், அவரின்தோட்டத்திலுள்ள வயலெற்புஷ்பங்களைப்பற்றியும் புகழ்ந்து பேசும்" என்பதுதான் என் செபத்துக்குப் பதில்போலத் தோன்றியது. யேசுவின் திருஇருதயத்துக்கும், சதாசகாயமாதாவுக்கும் நீர்சொன்ன சிறுசெபத்தின் வல்லமையை நீர் மறந்துவிடுதல் கூடாது. அவர்களின் பீடங்களில் நீர்சாற்றிய புஷ்பச்செண்டுகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐப்பசிமாதம்

பொதுக்கருத்து:— வேதகலாபனை வேளையில் பரிசுத்தகன்னிமரியாயின் மன்ருட்டினுல் வெல்லமுடியாத மனவலியை விசுவாசிகள் அடையும்படியாக வேண்டிக்கொள்வது.

வேதபோதககருத்து:— வேதபோதகநாடுகளில் உபதேசிமார்களின் தொகையும், தரமும் உயரும்படியாக மன்ருடிக்கொள்வது.

---

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அர்ச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

## கருதினல்ஆண்டகைக்கு நகரசபையின் வரவேற்பு

கருதினல் கிறகறி அகஜியானியன் ஆண்டவர் சென்றவாரம் கொழும்பில் தங்கியிருந்தபோது சென்றவெள்ளிக்கிழமைகாலை கொழும்புமுனிசிப்பல் சபை அவருக்கு ஒருபொதுவரவேற்பு உபசாரம்அளித்து அவரின் இலங்கை விஜயத்தைக் கௌரவப்படுத்தியது. கொழும்புமேயர் ஜனுப் எம்.எச். முகம்மதுஅவர்கள் கருதினல்ஆண்டவரின் சேவைச்சிறப்பைச் சிலாகித்துப்பேசியபின் நகரமக்கள்சார்பாக வெள்ளிப்பேழை ஒன்றில்வைத்து ஒருவரவேற்புப்பத்திரம் படித்துக்கொடுத்தார். கருதினல்ஆண்டவர் அளித்தபதிலிலே, தமதுவிஜயம் அதிகம்குறுகியதாயினும் விருந்தினர்களை அகமும்முகமும்மலரவரவேற்றுஉபசரிக்கும் மக்கள் மத்தியில் தாம்சிலநாட்கள் தங்குவதற்குக் கிடைத்த சிலாக்கியத்தைப் பெரிதெனக்கருதுவதாகக் கூறினர். இந்த வைபவத்தில் ஸ்தானிகர்கள், இராஜீயதூதுவர்கள், மற்றும்பிரமுகர்களாய் அநேகர் கலந்துகொண்டார்கள்.

## நிறுவைமூலம் மீன்விற்க வேண்டுகோள்

இன்று யாழ்ப்பாணத்திலே மரக்கறிவகைகள்உட்படச் சகலவிதமான பொருட்களும் நிறுவைமூலமே விற்பனையாகின்றன. இதனுல் அவற்றை வாங்குகிறவர்கள் எந்தவிதமானசிரமமுமின்றித் தங்களுக்குத் தேவையானவைகளைப் பெற்றுக்கொள்ள வசதிஏற்பட்டுள்ளது. அவ்வாறே, மீன்விற்பனையையும் பொதுமக்களின் நலன்கருதி நிறுவைமூலம் நடைபெறச்செய்ய வேண்டுமென்றுகேட்டு யாழ்ப்பாண நகரமக்கள் கடற்தொழில்மந்திரியை ஓர்மனுவின்மூலம் கேட்டிருக்கிறார்கள். இந்தமனுவின்பிரதிகள் கொழும்பு, கடற்தொழில்அதிபர், யாழ்ப்பாண அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மேயர், யாழ்ப்பாண எம்.பி. ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

---

யும் நினைவுகூரவேண்டும். உமது மனந்திரும்புதலுக்கு இவையெல்லாம் துணைபுரிந்தன என்பது எனது திறம்பாத நம்பிக்கை" என்றேன்.

குழிவிழுந்த கண்களிலிருந்து ஆனந்தக்கண்ணீர் வடிய என்னை உற்று நோக்கி, "ஆம், தேவன் நல்லவர்; இரக்கமுள்ளவர்" என்று சொன்னர் வயோதிபர்.

["தொன்பொஸ்கோவின் தேவமாதா" எனும் ஆங்கில பத்திரிகையில் ஒரு குருவானவர் எழுதிய கட்டுரையின் தமிழ்ச் சாரம்.]

---

## முதல் வெள்ளி முதற் சனி

—*—

**1—10—60 முதற்சனி**

**7—10—60 முதல்வெள்ளி**

தொடர்பாக ஒன்பதுமாதங்களிலே முதல்வெள்ளிக்கிழமை தோறும் திவ்வியநன்மை வாங்குகிறவர்களுக்குப் பாக்கியமான மரணமடையும் வரப்பிரசாதத்தை அருள்வதாக நமது திவ்வியகர்த்தர் வாக்களித்திருக்கிறார்.

தொடர்பாக ஐந்துமாதங்களிலே முதற்சனிக்கிழமை தோறும் திவ்வியநன்மைவாங்கித்தேவஇரகசியங்களைத்தியானித்துக்கொண்டு 15 நிமிஷநேரம் செபமாலை செபிக்கிறவர்களுக்கும் அதேவாக்குத்தத்தத்தைப் பரிசுத்த தேவதாயார் அளித்திருக்கின்றார்.

## புத்த பிரமஞானசங்கத்தின் எதிர்ப்பு

புத்த பிரமஞானசங்கத்தின்பொதுக்கம்மிற்றி சென்றசனிக்கிழமை தனது விசேஷகூட்டம்ஒன்றிலே, உதவிபெறும்பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்று நடத்தவிருப்பதை எதிர்ப்பதெனத் தீர்மானித்திருக்கிறது. இதற்குச்சாதகமாகக் கூட்டத்திலே 80வாக்குகளும், பாதகமாக 3வாக்குகளும் கிடைத்தன. இந்தக்கம்மிற்றி கல்விமந்திரிக்கு அனுப்பியுள்ள அறிக்கைஒன்றிலே "புத்தபிரமஞானசங்கத்தின்கீழ் சுமார்400பாடசாலைகள் இருக்கின்றன; இப்பாடசாலைகளில் கல்விபயிலும்மாணவர்களுக்குப் புத்தசமயகல்வி போதிக்கப்படுகிறது; இப்பாடசாலைகளை அரசாங்கம்பொறுப்பேற்றதும் புத்தசூழ்நிலையில் அவைகளை நடத்தமுடியாதென்று அச்சமாகவிருக்கிறது" எனத் தெரிவித்திருக்கிறது.

### ஜி. சீ. ஈ. பாடத்திட்டம்

பாடசாலையைவிட்டு வெளியேறியதும் கிடைக்கக்கூடிய ஏதாவதுஒரு தொழிலைப்பார்க்க வசதியளிக்கும் முறையிலே பொதுத்தராதரப்பத்திரபரீட்சைக்கல்வித்திட்டத்தை மாற்றியமைக்க கல்விப்பகுதி தீர்மானித்திருக்கிறது. புதியதிட்டத்தை அடுத்தவருடத்தில் ஆரம்பிக்கலாமென அதுஎதிர்பார்க்கின்றது.

## குதிரைப்பந்தைய செய்திகள்

அடுத்தவருடமுதல் குதிரைப்பந்தைய செய்திகளைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதை உள்நாட்டுமந்திரிகாரியாலயம் தடைசெய்யத் தீர்மானித்திருக்கிறது. குதிரைப்பந்தையசெய்திகளைப் பிரசுரிப்பது தடைசெய்யப்பட்டால் இலங்கைக் குதிரைப்பந்தைய செய்திகள்மாத்திரமல்ல, வெளிநாட்டுக் குதிரைப்பந்தையங்கள் பற்றியசெய்திகளும்பிரசுரிக்கமுடியாமல் போய்விடும்.

## திரிகோணமலை எம். பி. ஜப்பான் சென்றார்

இம்மாதம்29-ந்திகதியாகிய இன்று தினம் ரோக்கியோநகரில் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச பாராளுமன்றமகாநாட்டில் கலந்துகொள்வதற்காகத் தமிழரசுக்கட்சித் தலைவரும், பாராளுமன்றத்திலே திரிகோணமலை அங்கத்தவருமான திரு. என். ஆர். இராஜவரோதயம்அவர்கள் சென்றதிங்கட்கிழமை மாலை ஜப்பானுக்குப் பயணமாயினர். அம்மகாநாட்டிலே "ஆசியாவில் பாராளுமன்ற ஜனநாயகத்தின் எதிர்காலம்" என்னும்பொருள்பற்றி இவர் ஓர்உரைநிகழ்த்துவார். மகாநாட்டிற்குச்செல்லும் இலங்கைத் தூதுக்குழுவில் டக்றர் என்.எம்.பெறேரு, திரு. ஆர். ஜி. சேனனுயகா முதலிய மற்றும் அறுவரும் அடங்கியுள்ளனர்.

---

மட்டக்களப்புத்

## தாண்டவன்வெளித் தபால்

### பாத்திமாகிரியில் பரிமளிப்பு.

எம்பாத்திமாகிரியின் ஆண்டுவிழா இம்முறை சென்ற18-9-60ஞாயிறன்று நடந்தேறியது. அதற்குமுந்திய மூத்தினங்களாக ஆயத்தஆராதனைகள் நடந்தேறின. முதல்நாள் சனிவாரம் பாத்திமாகிரியும், மைதானமும் மாதாவின் வர்ணங்களாய நீல,வெள்ளைத் துவசங்கள், மின்சாரதீபங்களால் தேசோமயமாய்விளங்கின.

ஒலிபெருக்கிஅதன்பரிமளிப்பைப்பரப்பிக்கொண்டிருந்தது. பிற்பகல் 6-30 மணிக்குப் பாத்திமாஅன்னை மின்சாரகுழல் தீபங்கள், இயற்கைமலர்களிடையே அழகுறச்சிங்காரிக்கப்பட்டிருந்த மோட்டர் இரதத்தில் சகல வரிசைகளுடன் ஊர்வலம்வரலாயினர். அதுநடந்த பகுதிகளிலுள்ள கிறீஸ்தவர்கள் அன்னையைப் பக்திப்பரவசத்துடன்வரவேற்றுவழியனுப்பிவைத்தனர். சந்திகள்தோறும் கத்தோலிக்கபாடசாலைகளுக்காக விசேஷவேண்டுதல்கள் எமதுகட்டளைக்குரவர் வண.ஜி ஈ.எல். வம்பேக்சுவாமிகள் தலைமையில் நடைபெற்றன. ஊர்வலம் திரும்பமைதானத்தைஅடைந்ததும் திரிகோணமலை மேற்றிராசன பரிபாலனர் மகாவண. ஜெறோம் டீசாசுவாமிகளால் 1960-ம் ஆண்டிற்கும், பாத்திமாதரிசனைகட்குமுள்ள தொடர்புகளை விளக்கி ஒரு சிறந்தபிரசங்கம் செய்யப்பட்டது. அதன்மேல் வண. எல். ஆர். அன்ரனி, வண. ஜே. டி. கோமஸ்சுவாமிகள்துணைபுரிய மேற்றிராசனபரிபாலன சுவாமிகளால் மாலையாராதனைபாடித் திவ்விய நற்கருணை ஆசீர்வாதமும், கட்டளைக்குரவரால் தாண்டவன்வெளிப் பங்கு மாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டபின் திருச்சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டன.

### உரிமைக் குரலொலி

1960-ம்ஆண்டு புரட்டாதித்திங்கள் 4-ம்நாள் ஆயித்தியமலைச் சதாசகாயமாதா ஆலயவிழாவிற்குக் கூடியிருந்த சுமார் 7,000மக்கள்ஒன்றுசேர்ந்து அரசாங்கம் உதவிபெறும்பாடசாலைகளை எடுக்கப்போகும் அநீதியைக்கண்டித்துக் கத்தோலிக்க சமுதாயத்தின் உரிமைக்குரலொலியை எழுப்பி ஓர்கண்டனக்கூட்டம் நடாத்திப் பிரேரணைகளை அனுவதித்து ஆட்சிப்பீடத்துக்கு அனுப்பிவைத்தனர். எமதுபங்கிலுள்ள கத்தோலிக்க சங்கத்தினரும் சென்ற 11-9-60-இல் ஒன்றுகூடி எதிர்ப்புப் பிரேரணைகளை அனுவதித்து அனுப்பிவைத்தனர். சென்ற 18-9-60 ஞாயிறன்று பிற்பகல்4மணிக்குக் கத்தோலிக்கசங்கத்தின் ஆதரவின்கீழ் பாத்திமாகிரிமைதானத்தில் மாபெருங் கூட்டமொன்று நடந்தேறியது. அதிலே சுமார்பத்துப்பேர்வரை பேச்சாளர்கள், பெற்றோர்கள்பேச வைத்தனர். பிரேரணைகள் பின்வருமாறு:

1. கத்தோலிக்க பெற்றோராகிய நாங்கள் எங்கள்பிள்ளைகளைக் கத்தோலிக்கபாடசாலைகளுக்கு அனுப்ப எங்களுக்கு உரிமைவேண்டும்.

2. அரசாங்கத்தின் தேசியகல்வித்திட்டத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. கத்தோலிக்கபெற்றோராகிய நாங்கள் எமதுபிள்ளைகளைக் கத்தோலிக்கதிருச்சபையின் கட்டளைப்படி கத்தோலிக்க பாடசாலைக்கு அனுப்பவேண்டியது கடமையும், உரிமையுமாகும். ஆதலால், அரசாங்கம் ஆலோசனைச்சபை நியமித்து அதன்நடுநிலைத் தீர்ப்புக்கேற்க நடந்துகொள்ளுமாறு வேண்டுகிறது.

3. சட்டநிருவாகசபையின் சட்டப்படி 39-ம்இலக்க IAவிதியின்படி சாதி, சமயபேதமின்றி நமதுபாடசாலைகளை நடாத்துவோமென்றகோரிக்கையை அரசாங்கத்திற்கு நினைவூட்டி இப்பிரேரணைகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

இக்கூட்டத்தின் பேச்சாளர்களில் மட்டக்களப்பு முதலாவதுபிரதிநிதி திரு. செ. இராசதுரை அவர்களும், இவ்வட்டாரப்பிரதிநிதி திரு. ஆர். கதிரவேலுஅவர்களும், ஆசிரியமணி திரு. கே. எல். இராசேந்திரம்அவர்களும் இடம்பெற்றமை குறிப்பிடற்குரியது.

— நிருபர்

---

அர்ச். அன்னம்மாளின்

## முன்கை

திருச்சபையின் மதித்தற்கரிய மகாஅருமையான திருப்பண்டங்களில்ஒன்றுகிய அர்ச். அன்னம்மாளின் புனிதமுன்கை — அதாவது முழங்கைக்கும், மணிக்கட்டுக்கும் இடையிலுள்ளபாகமானது ரோமாபுரியிலே மதில்களுக்குவெளியேயுள்ள அர்ச். பாவிலுவானவர் மகாதேவாலயத்தின் ஆதீனகர்த்தாக்களான ஆசீர்வாதப்பர்சபைக் குருமாரால் கனடாதேச குவெபெக் இராச்சியத்திலுள்ள பியோப்பிறேபதியின் பேரானசந்தானுள்திருசேத்திரத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இப்புனித முன்கையானது ஏழுஅங்குலநீளமும் அடிப்புறம் இரண்டுஅங்குலஅகலமுமுடையது. இதுபியோப்பிறேபதியின் சந்தானுள்மகாதேவாலயத்தில் தற்போதுபூச்சியமாக வைக்கப்பட்டிருக்கிறது.

---

பியோ சுவாமிகளின்

## குருத்துவ யூபிலி

நமது இரட்சகரின் ஐந்துதிருக்காயங்கள் தம்மிலே அற்புதவிதமாகப் பதியப்பெற்றுள்ளவரும், கத்தோலிக்க உலகமுழுவதும் பிரஸ்தாபமாக அறியப்பட்டவருமான வண. பியோ சுவாமிகள் அன்று புதன்கிழமை இத்தாலியில் சான்ஜியோவன்னி றெட்கொன்டோநகரில் தமதுகுருத்துவ 50-ம்வருட பொன்யூபிலி விழாவைக்கொண்டாடியபோது, உலகின் சகலபகுதிகளிலுமிருந்து போன சுமார் 20,000 கத்தோலிக்கமக்கள் அங்கு குழுமியிருந்தார்கள். அன்றுசுவாமிகள் வரப்பிரசாதத்தின் மாதாகோவிலில் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். பூசையின்பின் சக்கிறிஸ்ரி அறையிலே பலநாடுகளிலுமிருந்து அனுப்பிவைக்கப்பெற்ற வாழ்த்துச்செய்திகளும், அன்பளிப்புகளும் அவரைவரவேற்கக் காத்திருந்தன.

---

● பரிசுத்த ஸ்தானத்தினிடமாய் இருந்துவருகின்ற ஐக்கியஅராபியகுடியரசின் ஸ்தானிகராலய கருமாதிகாரியான கமால் நாகுய்ப்அவர்கள் சமீபத்தில் பேசியபோது, தனதுநாட்டிலுள்ள கத்தோலிக்க பாடசாலைகளிலே குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரிமார் ஆற்றிவரும் கல்வித்தொண்டுகள் மாணவர்களாலும், அவர்களின் குடும்பங்களாலும் பெரிதும்பாராட்டப் படுவதாகத் தெரிவித்திருக்கின்றார்.

● "எக்காலத்திலாவது சொல்லப்பட்ட மாபெரும் சரித்திரசம்பவம்" என்ற நாமத்துடன் கிறீஸ்துநாதரின் சீவிய சரித்திரத்தைக் காண்பிக்கும் சினிமாப்படம்ஒன்று விரைவிலே ரோமாபுரியிலும், பரிசுத்தநாட்டிலும் படம்பிடித்துத் தயாரிக்கப்படவிருக்கிறது. இதனைத் தயாரிப்பதற்கென மூன்றுவருடங்களாக வேண்டியஆயத்தஞ் செய்யப்பட்டுவந்தது. இதற்குஏற்படும் செலவுமதிப்பு ஒருகோடி டலராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னமலரின் அன்னை தந்தையர்

(தொடர்ச்சி)

**2. பெற்றோர்எவ்வழி பிள்ளைகள் அவ்வழி:**

இன்றையநாகரீகம் குழந்தைப்பேற்றை அநாகரிகமாகக் கருதுகின்றது. குடும்பக்கட்டுப்பாடு, கர்ப்பத்தடை முதலிய நவீனகொள்கைகள்பல இன்று எம்நாட்டில் நடமாடிவருகின்றன. ஆயின் இறைவனின்திட்டம் பெற்றோரிலிருந்தே ஆரம்பமாகின்றது. அர்ச்சியசிட்டர்களும், வேதசாட்சிகளும்— குருக்களும், கன்னியர்களும் உதயமாவது அங்கிருந்தல்லவா?

பூவுலகில் ஓர்புனிதஅந்தஸ்து குருத்துவநிலை. குருக்களை நமக்குத்தருவதோ புனிதமான குடும்பவாழ்க்கை. என்றும்அழியாத ஆன்மாவொன்றை இறைவன் நமக்கு அளித்திருக்கின்றார். அவ்வான்மாவைத் தசையினாற்பொதிந்து உயிரூட்டுபவர்கள் பெற்றோரே. குருத்துவ நிலையிலும்பார்க்க மகிமைபொருந்திய மற்றோர்நிலை குடும்பவாழ்க்கையேயாகும்

ஓர்குடும்பத்தை ஆக்குவதும், நிர்வகிப்பதும் சிறந்தவோர்கலை. இக்கலை எல்லாப் பெற்றோருக்குமே சித்திப்பதில்லை. இல்லம் இறைவனுக்குகந்த புனிதர்களைப்பயிற்றும் சிறந்தபயிற்சிக்கூடமாகும். குழந்தைகள்பலர் இப்பயிற்சிக்கூடத்தில் காணப்படுதல் மகிழ்ச்சிமிக்க நிகழ்ச்சி. குழந்தையில்லாதகுடும்பம் குதூகலத்தையறியாத நரகமாகவிளங்கும்.

தங்கள் அறநெறிவாழ்வின் அத்திவாரம் பெற்றோரின் நல்வளர்ப்பினாலும், முன் மாதிரிகையாலுமே ஸ்திரப்படுத்தப்பட்டதெனப் பலபுனிதர்களும் சுட்டிக்காட்டுகின்றனர். சாங்கோபாங்கசீவியத்திலிருந்துபிசகிக் கிறிஸ்துவின்வழியிருந்து பிரிந்து நெடுந்தூரம்சென்ற தம்மைத் தடுத்துநிறுத்திச் சத்தியவழிக்குத் திருப்பியதுமன்றி, திருச்சபையின் உன்னதஅந்தஸ்துகளையுமடையச்செய்தவை தனதுஅன்னை மோனிக்காவின் நீண்டகால வேண்டுதல்களேயென்று வேதபாரகரான அகுஸ்தீனார் கூறுகின்றார். தன்சுகிர்தநடத்தையின் பாடங்கள் தனதுபெற்றோரிடமிருந்தே ஆரம்பமாயினஎன அவிலாநகரின் தெரேசம்மாள் தன்வாழ்க்கைவரலாற்றில் எழுதுகின்றாள். தங்கள்வாழ்வில் பரிசுத்தம்பரிமளித்தது, தங்கள்பெற்றோரின் வழிகாட்டுதலாலெனத் தொன்பொஸ்கோவும், பத்தாம்பத்திநாதரும் மொழிகின்றனர்.

எமது சின்னமலரம்மணியும் பூலோகத்துக்கல்ல, ஆயின்பரலோகத்துக்கே முற்றிலும் உரியஇருவர் எனக்கு இருமுதுகுரவர்ஆயினர்; இத்தகையஉத்தமர்களை எனதுவழிகாட்டிகளாகவும், காவலர்களாகவும் பெறாதிருப்பின் யான்பரலோகத்துக்கு எதிரானபாதையில் வெகுவேகமாகப் பிரயாணஞ்செய்திருப்பேன்; இறுதியில் என்ஆன்மாவையும் இழந்திருப்பேனென எழுதியிருக்கிறாள். சிறந்தபெற்றோருக்கென இறைவன்வழங்கிய பரிசுப்பொருளே அர்ச். தெரேஸ்எனக் கருதினால்மேசியர்ஆண்டகை மாட்டின்தம்பதிகளைப் பற்றிக் கூறும்போது குறிப்பிட்டாராம். மாட்டினின் புதல்விகள்ஒவ்வொருவரும் துறவறத்தைநாடியபோது அவரின் நண்பரும், ஆன்மகுரவருமான வண. பிச்சன்சுவாமிகள் அவர்களைநோக்கி: நீங்கள் உங்கள்மதித்தற்கரிய பெற்றோரிடமிருந்து பெற்றதிரவியங்களை அழித்துவிடாதீர்கள்எனக் கூறிவருவாராம். பரிசுத்தகபகமழக தங்கள்வாழ்க்கையை நடாத்தி இன்றுபுனிதர்களாக விளங்கும் மாட்டின்— ஷீலிதம்பதிகள் இன்றையகுடும்பங்கட்கெல்லாம் உதாரணதம்பதிகளாக விளங்கத்தக்கவர்கள்.

**3. அன்னையின் தத்துவத்தை அறிந்த பெண்மணி:**

ஷீலிமாட்டின் ஒருஇலட்சியஅன்னை. பலகுழந்தைகளைப் பெற்றெடுத்து அனைத்தையும் இறைவன்தொண்டில் அர்ப்பணித்தது அவளின்இதயதாகம். ஆண்டவன்பணியில் தனதுசெல்வங்கள் அனைத்தும் இயங்கவேண்டும் என்பதைத்தவிர வேறெதையும் அவள்அறியாள். தனதுஇடத்தைத் தன்பிள்ளைகள் நிரப்பவேண்டுமென்பது அவளது தணியாதஆவல். அந்தஆவல் நிறைவேறியதென்பதற்குச் சரித்திரம் சான்றுபகரும்.

ஒவ்வொருகத்தோலிக்கதம்பதிகளும் தங்கள்புதல்வனொருவன் குருவாய்வரவேண்டுமென்பதைத் தங்கள்இலட்சியங்களுள்ஒன்றாய்க் கொண்டிருக்கவேண்டுமெனவும், இவ்விலட்சியம் நிறைவேறும்படி தங்கள்தினந்தசெபங்களில் வேண்டிக்கொள்ள வேண்டுமெனவும் பரிசுத்தபிதா பன்னிரண்டாம்பத்திநாதர் கூறியிருக்கிறார். இப்பாப்பானவருக்குப் பலவருடங்களின் முன்வாழ்ந்த மாட்டின்தம்பதிகளும் இக்கருத்தையே கொண்டிருந்தனர். தங்கள்புதல்வனொருவன் குருவாகிப் புதுவேதநாடுகளுக்குச்சென்று கர்த்தரின் திருவேதத்தைப் பரப்பவேண்டுமென அவர்கள்விரும்பினர். தினந்தம் இக்கருத்துக்காகச் செபித்தனர்.


அன்னையாவதை ஆசித்தாள்ஷீலி. தனதுதோழிக்குஎழுதிய கடிதமொன்றில் எங்களுக்குக் குழந்தைகளிருப்பின் அவர்கட்காகவே நாம்வாழ்வோம். அவர்களின்நல்வாழ்வுக்காக எங்களைப் பரித்தியாகம்செய்வோம். அவர்களிடமிருந்து நாங்கள் பெறக்கூடியஇன்பம் உன்னதமானது. இவ்வுலக இன்பங்கள் எதுவும் அதற்கு இணையாகமாட்டாது. குழந்தைகளே எனக்குச்சிறந்த நண்பர்களாகக்கூடும். எனதுதுன்பங்களில் ஆறுதலாகவும் அவர்கள்விளங்குவர். பரலோகபாதையில் அவர்களைநடாத்துவதே எனதுஏகலட்சியம்எனக் குறிப்பிட்டுள்ளாள்.

மாட்டின்தம்பதிகள் தங்கள்தலைச்சன்பிள்ளையை ஆவலோடு எதிர்நோக்கினர். அதற்கான ஆயத்தங்களில் முனைந்தனர். அதைப்பற்றிப்பேசுவதில் அவர்களின்பெரும்பொழுது கழிந்தது. அக்குழவியின் எதிர்காலதிட்டங்களில் முனைந்தனர். அதன்நல்வாழ்வுக்காக அயராது பிரார்த்தித்தனர். ஷீலி தன் வாழ்க்கை தூய்மைபொருந்தியதாய் அமைய விசேடகவனம் எடுத்துக்கொண்டாள். குழந்தையின்வாழ்க்கை ஆரம்பமாகும்போது தன்வாழ்வின் சாயல் அதனுடன் இரண்டறக் கலந்துவிடும்என அவள்நம்பியிருந்தாள்.

ஈற்றில் அப்பொன்னானதினமும் அணமியது. அன்று 1860-ம்ஆண்டு மாசி22. ஷீலி அன்னையாகும் பாக்கியம்பெற்றாள். அந்தநல்லநிகழ்ச்சியை அவள்வெகுகாலம் நினைவில்கொண்டிருந்தாள். தங்கள் தலைச்சன்புதல்வியைப் பரலோகஆசியின் பாதுகாப்பில் ஒப்படைப்பதென மாட்டின்தம்பதிகள் தீர்மானித்தனர். புதிய செல்வி மரியே என அழைக்கப்பட்டாள். ஞானமுழுக்கின்பின்னர் லூயிஸ்மாட்டின் குரவரை நோக்கி முதன்முதலாக ஞானமுழுக்காட்டும் வைபவமொன்றில் என்னைக் காண்கிறீர்கள்; ஆனால், இதுகடைசியல்ல; இன்னும்பல குழவிகளை இங்கு கொணர்வேன்என மகிழ்ச்சியுடனும், பெருமையுடன் [illegible].

ஷீலி தன் [illegible] கடிதங்கள் இன்று அவளதுவாழ்க்கையைச் சித்திரித்துக்காட்டும் ஓவியங்களாக மிளிர்கின்றன. அவற்றில்சில அன்னையாவதில் அவள் கொண்ட மகிழ்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன. தனதுகுழந்தையைத் தன்கரங்களில் எடுத்து மார்புடன் அணைத்துக் கொண்டகாட்சியைமட்டும் ஒருவிகிதத்தில் அவள்விபரித்திருக்கிறாள். முதற்குழந்தையின்பிறப்பு என்னை ஆனந்தபரவசத்தில் ஆழ்த்தியது. அவள் நல்லசுகபெலத்துடன் காணப்பட்டாள். ஒவ்வொருகுழந்தையும் பிரவசத்தின்போது அதிகதுன்பங்கொடுத்தனர். ஆயின் பின்னர் அவர்கள் எனக்கு அளிக்க இன்பங்கள் அனந்தம் என ஒரு கடிதம் கூறுகின்றது.

(தொடரும்)



# இளைஞர் பக்கம்

**அன்புமிக்க இளைஞர்களே!**

தேவன் சகல மனிதரையும் நேசிக்கிறார். எல்லா மனிதரையும் தம்முடைய சாயலாகவே படைத்தார். இன்னும் தமது அருமைக் குமாரனாகிய யேசுவின் திரு இரத்தத்தினால் சகலரையும் மீட்டார். முடிவில்லாத பேரின்பபாக்கியமாகிய மோட்சராட்சியத்தில் சகலரும் சேரவேண்டுமென்று விரும்புகிறார். இதனால் நாங்கள் சகலரையும் நேசித்து எங்களால் செய்யக்கூடிய நன்மைகளை விசேஷமாக ஆத்தும விஷயங்களிலும் செய்வோமாக.

நாங்கள் எங்கள் அயலாரைக் கிறீஸ்துநாதருக்காகச் சிநேகிப்போமாக. ஏனென்றால், அவர் சகலரையும் தனது சகோதரர், சகோதரிகள் என்று கணிக்கிறார். நாங்கள் சருவேசுரனுடைய பிள்ளைகளும் கிறீஸ்துநாதருடைய சீடர்களுமாயிருக்கிறபடியால் எங்களுடைய சத்துராதிகளை நேசிக்கவேண்டும். "உன் பிறனை நேசித்து உங்கள் சத்துராதிகளை நேசியுங்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறதே. "உங்கள் சத்துராதிகளை நேசியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்காகவும் உங்கள்பேரில் அபாண்டம் சொல்லுகிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். இவ்விதம் செய்தால்.........உங்கள் பிதாவுக்கு ஏற்ற பிள்ளைகளாயிருப்பீர்கள்" (மத். 5:44—45). இன்னும் யேசுநாதர் தாமே தமது சத்துராதிகளுக்காகச் சிலுவையில் மரிக்கும்பொழுது வேண்டியுள்ளார். "பிதாவே இவர்களை மன்னித்தருளும். ஏனெனில், தாங்கள் செய்வது இன்னதென்று அறியார்கள் என்றார்" (லூக். 23:34). இவரைப் பின்பற்றிய முதல் வேதசாட்சியாகிய அர்ச். முடியப்பரும் இன்னும் பலரும் தங்களை உபாதித்தவர்களுக்காக வேண்டியிருக்கிறார்கள். யாரும் உங்களை தூஷணித்து நிந்தித்தால் அவர்களை மன்னித்து அவர்களுக்கு நண்பர்களாயிருங்கள். யாரையாவது நாங்கள் நிந்தித்திருந்தால் கூடிய சீக்கிரத்தில் மன்னிப்பைக்கோரி ஆகவேண்டிய பரிகாரத்தைச் செய்யுங்கள். நீங்கள் பிறரை மன்னித்தால்தான் உங்களையும் உங்கள் பரமபிதா உங்களுக்கு மன்னிப்பார். இதனால் தாராள சிந்தையுள்ள வாலிபர்களாக இன்றைய உலகில் நாம் திகழவேண்டும்.

—(○)—

# யேசு எம்மை இரட்சித்தார்

நிலைகுலைந்திருந்தமனதிற்கு நிம்மதி அளிக்கக் கடற்கரையை நோக்கிச் செல்லக் கால்களுக்கனுமதி கொடுத்தேன். கண்கவர்காட்சி கருத்தைச் சிதைத்தது. பரந்தமணற்பரப்பு, விரிந்தபுற்றரை, அடர்ந்ததென்னஞ்சோலை. ஓலமிட்டு ஓடுவதை ஓய்வொழிவின்றி அனுசரிக்கும் அலைகடல், மண்வீடுகட்டும் மாசற்ற மழலைக்குழவிகள், பேரிரைச்சலுக்கும், பெரும் புயலுக்கும்இடையே வாழ்வு நடத்திவந்த மணாளனை மகிழ்வுடன் அழைத்துச்செல்லும் மங்கையர்கள், பட்டம்விட்ட இளம்மட்டச் சிறார்கள் இத்தனைக்கும்நடுவே இருளரக்கன் படைகளைப் படரவிட்டான் மேதினியில் இறைவனைவேண்ட எல்லோரும்பணியோசைகேட்டுச்சென்றனர். நானும் யேசுவைவேண்டி இரக்கம்பெறக் கோவில்செல்லக் கடைசியாக உற்றுநோக்கினேன் கடலை. ஓர்உருவத்தை அலைகள் உருட்டிக்கொண்டு வந்தன. ஓடிச்சென்று தாவிப்பிடித்தேன். என்ன ஆச்சரியம்! ஓர்இளம்பெண். உடனே கரைக்குக் கொணர்ந்து முதலுதவி செய்தேன். மூச்சுவந்தது. "அம்மணி தாங்கள் யார்"என்றேன்.

அதற்குஅவள்: "இரக்கம்படைத்த கருணைவள்ளலே சொல்லுகிறேன். தங்கபுரியைத் தாயகமாகக்கொண்டோர் என்பெற்றோர்."

"அதுதானே இவ்வூர்."

"இவ்வூரா! சற்றுப்பொறுங்கள். தங்கபுரியைத் தாயகமாகக்கொண்டு தர்மம்புரிந்தனர் என்தந்தைதாய். இருதயவியாதியால் என்னைவிட்டுப் பிரிந்தாள் அன்னை. தந்தை குமாஸ்தா. அவர்யேசுவுக்கும், மரியன்னைக்கும்உரிய பக்திமுயற்சிகளைப் பரிவுடன்செய்தார் ஓய்வுநேர உழைப்பாகக்கொண்டு. காணும் கல்நெஞ்சரும் கரைந்துருகுவர் என் தந்தையிடம். அவருக்கோர் தங்கையும், ஐந்துவயதுச் சிறுவனும். கடவுள் பக்தியுள்ள என்தந்தை தங்கபுரியிலிருந்து சிங்கபுரிக்கு மாற்றப்பட்டார். அங்கு பதினைந்துவருடம் பாங்குடன் வாழ்ந்தோம். நானும் படித்துப் பட்டம்பெற்றுப் பெரியவளாகிப் பட்டணத்தில் உத்தியோகம் பெற்றேன். எல்லாமாக இருபதாண்டு இன்பமுடன் இருந்துவிட்டுத் தங்கபுரியைப்பார்க்கக் கப்பலேறினோம். தந்தை தங்கைக்குத் தந்தியடித்தார் புறப்படுகிறோமென்று. இரண்டுவயது எனக்குநடக்கும்போதுகண்ட ஐந்துவயதுஅத்தான் இப்போஎன்னிலும்பெரியவராயிருப்பாரென்றும். ஆசையுடன் என்னை வளர்த்த அத்தையைக் காணப்போகிறோமென்றும் ஒரே சந்தோஷம். எங்கள்விதி கப்பல் கரைதெரியாமல் ஓடிக் கல்லில்மோதுண்டு உடைந்தது. தந்தையிறந்தார். தப்பித்தவறிக் கையில்பிடிபட்ட ஓர்பலகையை இறுகத்தழுவினேன். அவ்வளவுதான் தெரியும். யேசுஎன்னை இரட்சித்தார் றெஜி."

"எப்படி என்பெயர் தெரியும்? தமயனையும், மகளையும் காண்போமென்று தந்திகண்டு சந்தோஷித்தாள். கப்பல் உடைந்ததென்று கேள்விப்பட்டுத் தவியாய்த்தவித்தாள். கல்லில் மோதிவிழுந்து கையையொடித்து ஆஸ்பத்திரியில் கிடக்கிறாள் ஓர்விதவை. அவளின் மகன் தான் நான். நான்தான் உன்அத்

[தொடர்ச்சி 8-ம்பக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

செபமாலைமாதாவின் மாதம் அண்மியது. கோவில்களில் திவ்விய நற்கருணை எழுந்தேற்றம் செய்துவைத்துச் செபமாலை சொல்லிவருவர். பரிசுத்த பாப்பரசர் இதற்கு விசேஷ பலன்களைக் கட்டளையிட்டுள்ளார். தேவதாயாருக்கு மிகவும் பிடித்தமான செபம் செபமாலை. லூர்து, பாத்திமா எனும் திருப்பதிகளிலே அவர் காட்சிதந்து, விரும்பிக் கேட்ட செபம் செபமாலை. எனவே, சிறுவர்-சிறுமிகளாகிய நீங்கள் செபமாலையைப் பக்தியுடன் சொல்லிவாருங்கள். ஒவ்வொரு பிரியதத்த மந்திரமும் தேவதாயாரை வாழ்த்தும். அது ஒவ்வொன்றும் அவருடைய பாதங்களில் சாத்தப்படும் ரோசா மலருக்குச் சரி. ஆகவே, நீங்கள் ஒவ்வொருவரும் ஐப்பசிமாதத்தில் தேவதாயாரின் பாதங்களில் எத்தனை ரோசாமலர்களைச் சாத்துவீர்கள் என்பதை நீங்களே தீர்மானியுங்கள்.

உங்கள்அன்புள்ள அண்ணா.

## 'சின்னவழி' கண்ட சிறுமலர்

(சென்றவாரத் தொடர்ச்சி)

அர்ச். தெரேசம்மாளை எண்ணுந்தோறும், அவளது பூசையில் வாசிக்கப்படும் சுவிசேஷ நிகழ்ச்சி நமது கண்களின்முன் நிற்கவேண்டும். "அப்பொழுது யேசுநாதர் ஒரு பாலனை அழைத்து, அவனை அவர்கள் நடுவில் நிறுத்தி, 'நீங்கள் மனந்திரும்பிப் பாலர்களைப்போல் ஆகாவிட்டால் பரலோக இராச்சியத்திலே பிரவேசிக்கமாட்டீர்கள்' என்று மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன்" என்றார் (மத். 18:2,3). இதுதான் தெரேசாளின் வாழ்க்கை நெறியாக அமைந்தது. ஞான முயற்சிகளில் தான் முன்னேறிய செம்மைப் பாதைக்குச் "சின்னவழி" என்ற செல்லப்பெயர் கொடுத்தாள்.

சின்னவழி பற்றி அவளே பலமுறை எழுதியிருக்கிறாள். "உத்தமதனத்தை அடைவதில் ஏற்படக்கூடிய தடைகள்பற்றியும், இன்னல்கள்பற்றியும் விரிவாகக்கூறும் ஞான நூல்களைப் படித்தபோதெல்லாம் என் சிற்றறிவு களைப்புற்றது; என் தலையைச் சுழற்றி இதயத்தைத் தளரச் செய்த அந்தப் பெரும் புத்தகத்தை மூடிவிட்டு, உடனே பரிசுத்த வேதாகமத்தை எடுத்து வாசிப்பேன்; உடனே என்புத்தி தெளிவுறும்; ஒரேஒரு சொல் என் ஆத்துமத்திற்கு அளவுகடந்த ஆகாயவெளியைத் திறந்துவிடும்; உத்தம தனத்தை அடைவது எளிதாகப் புலப்படும்; நாம் ஒன்றுமே இல்லை என்பதை உணர்ந்து, கடவுளின் கரங்களில் ஒருசிறு குழந்தையென நம்மையே கையளித்துவிட்டால், அதுவே போதுமானது என்பதை உணருகிறேன்".

சிறு குழந்தையென நம்மையே கையளிக்க வேண்டும் எனக் கூறுகிறாள் தெரேசாள். சிறு குழந்தை என்றதுமே கபடமறியாத மாசற்றதனத்தைத்தான் எண்ணுகிறோம். நன்மை, தீமை அறிவிக்கும் மரத்தின் கனியை உருசித்துவிட்ட நமக்குப் பாவமறியாத, தேவ திருவருளை இழக்காத பச்சிளம் பாலகரைக் கண்டதும் நம்மை அறியாமலேயே அவர்கள்மட்டில் கனிவும், பரிவும் சுரக்கிறது. குழந்தைகளின் குறும்புப் பார்வையிலே அவர்களின் மாசற்றதனம் ஒளிவீசுகிறது. அவர்களின் கிலுகிலுக்கும் சிரிப்பிலே மறுஉலகஅழகு பளிச்சிடுகிறது. தாயை நோக்கி ஓடும் அவர்களின் ஓட்டத்திலே எல்லையற்ற நம்பிக்கை துள்ளுகிறது. அவர்கள் அன்னையை அரவணைக்கும் பரவசத்திலே தூயஅன்பு துளிர்க்கிறது.

கடவுள் நமது நல்ல தந்தையல்லவா? தினமும் அவரை "எங்கள் பிதாவே!" என்றுதானே அழைக்கிறோம்! அவர் நமக்குத் தீமையை விரும்புவாரா? இன்னல்களை அனுமதித்தாலும் நல்ல தந்தையைப் போல, நாம் நலமுறவேண்டும்என்றுதானே அவற்றை அனுமதிப்பார். பாவத்தால் நாம் பங்கமுற்றது உண்மைதான். இறைவனைஎதிர்த்து



நிந்தனை புரிந்துவிட்டோம். ஆனால், "மனந்திரும்பும் ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் அதிகஅக்களிப்பு உண்டாகும்" என்று உரைத்தவர் அல்லவா நம் அன்புத் தெய்வம்! பாவமே இல்லாத அருள் வாழ்க்கையை என்றுதான் தொடங்கப்போகிறோம்? குறும்பு செய்த குழந்தை பெற்றோரின் தண்டனைக்கு இலக்காகிறது. ஆனால், அடுத்த நிமிடமே "அம்மா" என்று அன்னையிடம் ஓடவில்லையா?

"உள்ளத்திலே கள்ளமும், உதட்டிலே வெல்லமும்" எனப் பேசுவோரை எப்படி வெறுக்கிறோம்? உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவோரைக் கண்டால் எப்படி மனம் வெதும்புகிறோம்? ஆனால், இறைவனிடம் நாம் எப்படி நடக்கிறோம்? நம் சுற்றுச் சார்புகளில் நம் நடத்தை என்ன?

"யேசுவின் திருஇருதயமே! என் நம்பிக்கையைஎல்லாம் உமதுபேரில் வைக்கிறேன்" என்று உறுதி கூறுகிறோம். உண்மையில் நம்பிக்கை எல்லாம் வல்ல யேசுவின் திரு இருதயத்திடம் இருந்தால், நாம் அடிக்கடி கவலைக்கும், ஏக்கத்திற்கும் இடம் கொடுப்பதேன்? அன்னை அருகில் இருக்க ஏங்கியழும் குழந்தை உண்டோ?

"அன்புவழி எவ்வளவு இனிமையானது! ஆன்மா ஒருவேளை சறுக்கி வீழ்ந்து உறுதி தளருதல் கூடும். ஆனால், அன்பு எல்லாவற்றையும் நன்மையாக்கும் ஆற்றல்வாய்ந்தது. நமது ஆண்டவருக்குப் பிடிக்காததை எல்லாம் அன்பென்னும் நெருப்பு சுட்டெரித்துத் தூய்மையாக்கி, ஆன்மாவில் தாழ்ச்சிமிக்க, ஆழ்ந்த சமாதானத்தைப் பரப்புகிறது" என அறிவுரைகூறுகிறாள் "யேசுவின் சிறுமலர்" எனத் தன்னையே அழைத்துக் கொண்ட தெரேசாள். அவள்காட்டிய "சின்ன வழி" யேசுவை அடையும் சிங்காரச் செல்வவழி அல்லவா?

— தி. இ. தூதன்

## முன்னேற வழி

உலகில் தவிர்க்கப்பட வேண்டியவற்றிலே பொறாமையும் ஒன்றாகும். பெரியோர்கள் எல்லாரும் பொறாமைப்படாதே என்றுதான் நமக்கு உபதேசிப்பார்கள். பொறாமைப்படுதல் பாவம். ஆனால், நான் சொல்லும் பொறாமை அதுவல்ல. கல்வி விஷயத்தில் பொறாமைப்படுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். அதாவது, ஒருவகுப்பில் கல்விகற்கும் மாணவிகளிலே ஒரு மாணவி தவணைப்பரீட்சையில் முதலாவதாய் வந்தால் மற்றமாணவிகள்ஒவ்வொருவரும் அடுத்தபரீட்சையில் எல்லோரையும்விட நான் முதலாவதாய் வரவேண்டும் என்று பொறாமை கொண்டு படிக்கவேண்டும். அப்படிப் படித்தால் எல்லா மாணவிகளும் வருங்காலத்தில் அறிவாளிகளாகத் திகழமுடியும். இதுவே முன்னேறுவதற்குச் சிறந்தவழி.

— செல்வி ரோஸ் பிரான்சீஸ்

உங்கள் விஷயதானங்களை
மேல்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்
"அண்ணா",
அர்ச். அன்னம்மாள் கோவில்,
பாண்டியந்தாழ்வு,
சுண்டிக்குளி.

## எங்கு போயிருந்தீர்கள்?

ஒருநாள் வேதம் போதிக்கும்படி மஞ்சூரியா நாட்டுக்குப் போயிருந்த ஒருகுருவானவர் கிழிந்தஉடையுடன் பசியினால் குற்றுயிராய்க்கிடந்த ஒரு கிழவியைக் கண்டார். அவளை அவர் ஒரு பத்திரமான இடம் சேர்த்துச் சுடச்சுடச் சாப்பாடு கொடுத்தார். அவர் செய்தவற்றையெல்லாம் கவனித்தஅவள், "என்னைக் கவனிப்பார் ஒருவருமில்லையே; நீங்கள் மாத்திரம் எனக்காக ஏன் இவ்வளவு சிரமப் படவேண்டும்?" எனக்கேட்டாள்.

"ஏனெனில், உன்னை உண்டாக்கிய கடவுளே என்னையும் உண்டாக்கினார். உலகெங்கும் போய் யார் யாருக்கு உதவி தேவையோ அவர்களுக்கெல்லாம் உதவிசெய்ய வேண்டும்" என்று அவர்சொல்லியிருக்கிறார் என அந்த வாலிப குருவானவர் பதிலளித்தார்.

இதைக்கேட்ட கிழவி பிரமிப்புடன் அவரை நோக்கினாள். "எவ்வளவு நேர்த்தியான கருத்து! இது எங்கிருந்து வந்தது? அதைத் தொடக்கியது யார்?" எனக் கேட்டாள்.

குருவானவர் அவளுடைய கேள்விகளுக்குப் பொறுமையுடன் பதிலளித்தார். கிறீஸ்துநாதர் இவ்வுலகுக்கு வந்தது, ஏழைகள், துன்புற்றோர்களிடையே அவர் செய்துவந்த அன்புத் தொண்டுகள், தம்மைப் பின்செல்பவர்களுக்கெல்லாம் உலகெங்கும் சென்று துன்புற்றவருக்கு உதவி செய்யும்படி அவர் கொடுத்த கட்டளை இவைகளைப்பற்றித் தெளிவாக அவளுக்கு எடுத்துரைத்தார்.

கிழவி இதைப்பற்றி நெடுநேரம் சிந்தித்துக்கொண்டிருந்துவிட்டு, "இந்தக்கிறீஸ்துநாதர் இறந்துநெடுநாள் ஆகியிராதல்லவா?" எனக் கேட்டாள்.

"இல்லை, 1900 ஆண்டுகளுக்கு முன் இவ்வுலகில் அவர் வசித்தார்" எனக் குருவானவர் கூறினார்.

"மனிதன் மற்றமனிதர் யாவரையும் நேசிக்கவேண்டுமென்னும் அழகிய போதனையை உலகெங்கும் பரப்பும்படி 1900 ஆண்டுகட்குமுன் அவர் சொன்னார்; இந்த 1900 ஆண்டுகளாகக் கிறீஸ்தவர்களாகிய நீங்கள் எல்லோரும் எங்கு போயிருந்தீர்கள்? கிறீஸ்துநாதர் சொன்னதை இவ்வளவு காலமாக ஏன் செய்யவில்லை" என வினவினாள் கடைசியாக.

[1935-ம் ஆண்டில் இந்த வரலாற்றைப் பற்றிக் கேள்விப்பட்ட ஒருவர் இதைக் கூறினார்.]

— அன்ரனெற் சோமாபோல்

### பாலர் பக்கம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

பெயர்: ..................................................

ஆண் / பெண்: ..................................................

பிறந்த திகதி: ..................................................

வகுப்பு: ..................................................

பாடசாலை: ..................................................

வீட்டு விலாசம்: ..................................................

விசாரணைப்பங்கு: ..................................................

முதல் நன்மை பெற்ற திகதி: ..................................................

உறுதிப்பூசுதல் பெற்ற திகதி: ..................................................

விண்ணப்பப்பத்திரம் அனுப்புவோர் மூன்று விண்ணப்பப் பத்திரங்களையும் ஒன்றாக வைத்து அனுப்பவேண்டும். தனித்தனி அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### யேசுஎம்மை இரட்சித்தார்

[ இளைஞர்பக்கத் தொடர்ச்சி ]

தான். அலக்ஸ் என்னையும் யேசு இரட்சித்தார்."

யேசுஎம்மை இரட்சித்தார் என்ற இருவர்குரலும் ஏககாலத்தில் தொனித்தது. பலமாதங்களின்பின் அலக்ஸக்கும், றெஜிக்கும் வெகுசிறப்பாகத் தங்கபுரி கன்னிமரிகோயிலில் இனிதேதிருமணம் நிறைவெய்தியது.

ச. யேசுதாசன் லெயோபோல்ட்,
அரிப்பு.

---


அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்



சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்


### கேட்ட நன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கம்பளை: மிசெஸ் ஏ. டி. சேவியர் 4-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 —முல்லைத்தீவு: எம். அருளானந்தம் 3-00 — உடப்புசலாவ: ஏ. எஸ். பீற்றர் 6-00 — வலுத்தோட்ட: ஏ. ஏ. றட்ணம் 2-00 — கொற்றன்தீவு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — பூக்குளம்: டி. டி. யோசேப்பு 2-00 — கல்பிற்றி: எஸ். பி. ரோனீஸ் 10-50 — மறிச்சுக்கட்டி: ஏ. எம். பறுனூந்து 1-00 — கன்னுரேட்டு: பி. சந்தனம் 2-00 — மாம்புரி: ரி. மரியான் 1-00, டபிள்யு. எம். பெர்னண்டோ 5-00 —புத்தளம்: என். எவ். அல்பிறெட் 4-00 — அல்வாய்: எஸ். என். அந்தோனிப்பிள்ளை 10-00, பி. அந்தோனிக்கம்மா 1-00—எட்டியாந்தோட்டை: ஆர். எஸ். இராசையா 2-00, எம். எவ். எஸ். மேரியம்மாள் 2-00—முள்ளிக்குளம்: ரி. அன்னம்மாள் 1-50—பண்டத்தரிப்பு: மிசெஸ் மேரி யோசேப்பு 3-00—ஈச்சமோட்டை: எஸ். சவிரிமுத்து 2-00 — சூராவத்தை: எல். சின்னம்மா 3-00, எஸ். ஆசிர்வாதம் 1-00 — வட்டக்கொடை: எம். ஐ. ஜே. தம்பி 2-00—தலவாக்கொல்லை: ஓர் உபகாரி 30-00 — மன்னார்: எம். செபமாலை 2-00—கல்கமுவா: எம். பிரான்சிஸ் 2-00, பி. செல்லத்துரை 1-00, எம். சந்தியாப்பிள்ளை 10-00, எஸ். செபஸ்ரியாம்பிள்ளை 1-50, ரி. ஜெற்றூட்அம்மா 1-00 ஏ. யுவான்பிள்ளை 2-00, ஏ. மரியானுள் 2-50, ஆர். சுவக்கிம் 1-00, எம். எஸ். கிறகோரிஸ் -50, வி. சந்தியாப்பிள்ளை 1-00, மேரிஸ்ரெல்லா பீரிஸ் 2-00, வ. எஸ்தேபிள்ளை 2-00, லூசியானு -50 — முள்ளிக்குளம்: எம். எஸ். டிமெல் 2-00, எஸ். மரியாம்பிள்ளை 1-00, ஜே. அமிர்தம்மா வாஸ் 1-00, ஏ. எலிசபேத் 1-00, எஸ். எல். லெம்பேட் 1-00, எஸ். ஞானம்மா குருஸ் 1-00 — மிருசுவில்: பி. ஜே. சிறில் 1-00, ஏ. எஸ். தைரியநாதர் 3-00—மன்னார்: எம். ஆர். லூவீஸ் 1-50, சி. பத்மராசா 1-00—கொழும்பு: மிசெஸ் அன்ரன் 2-00, ஜி. அந்திரேஸ் 3-00—இற்முலே: பிருங் அன்ரன் 3-00—பருத்தித்துறை: எம். அருளம்மா 3-00, ரி. மரியாம்பிள்ளை 5-00 — குருனகல்: ஏ. பி. மின்டீஸ் 4-00 — நீர்கொழும்பு: மிசெஸ் ஏ. என். வில்லவராயன் 3-00, எஸ். ஜி. செல்லத்துரை 5-00 — செட்டிகுளம்: ஜே. இராயப்பு 10-00, என். எம். டானியல் 5-00 — சுன்னுகம்: மரியசலோமை 2-00—உடப்புவா: ஆர். எம். பி. பிள்ளை 5-00 — உக்குவளை: ஏ. எஸ். வஸ்தியான் 7-00 — பேசாலை: வி. ரி. குருஸ் 10-00, எம். ஆர். லம்பேட் 2-00 — நேரியகுளம்: ஜி. சின்னப்பு 5-00 — நாவற்காடு: ரி. பிலோமினு 3-00 — நெடுந்தீவு: ஜே. ஞானப்பிரகாசம் 10-00 — கட்டைக்காடு: ஆர். எஸ். பி. எஸ். பிள்ளை 2-00 — மஸ்கேலியா: ஜி. திரேசம்மா: 2-00, ஜி. அருளானந்து 2-00, கே. வி. சின்னையா 1-00 — நனுஒயா: எவ். எம். பர்ணபாஸ் 3-00 — நுவரெலி: எஸ். எம். சந்தனம் 2-00 — தலவாக்கொல்லை: ரி. ஏ. குருஸ் 3-00 — பென்ரலோனியா: எம். அந்தோனிப்பிள்ளை 2-00—பண்டாரவளை: மிசெஸ் ஜே. எஸ். பீற்றர் 2-00.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1695**

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

கரம்பன்
V. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா
— வழக்காளி.

எதிராக
வேலணை மேற்கு
1. காலஞ்சென்ற முத்து கணபதி யோகவனம் கைம்பெண் இராசம்மா
2. ஷெயூர் யோகவனம் இரத்தினம்
3. ஷெயூர் யோகவனம் செல்லையா

2-ம் எதிராளி காலஞ்சென்ற 1-ம் எதிராளியின் ஆதனங்களின் பராமரிப்புக்காரன். — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 1695-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1960-ம்ஞு ஐப்பசிமீ 15-ம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 5000-ம். ரூபா 2500-க்கு 19-6-57 தொடக்கம் 11-3-58 வரை 12வீதமான வட்டியும், அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 356-07 சதமும். கோட்டுச்செலவில் ரூபா 150-ம், தீர்வைத் தொகையில் ரூபா 1000-மும் கொடுபட்டது.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி, வேலணைக்கோவிற்பற்று, வேலணை மேற்கிலுற "நானன கலட்டி" பர. நீ. இல. பதின்மூன்று குளி எட்டேகால் (பர. நீ. இல. 13 குளி $8\frac{1}{4}$). பனைகளும், வான்பயிர் செய்பயிர்களும். எல்லை: கிழக்கும், வடக்கும்—ஒழுங்கை. மேற்கு—முருகேசு நாகலிங்கத்தின் உரிமைக்காரர்கட்குரியவாதனம். தெற்கு—எதிராளிகட்குரியவாதனம். இதன்பதிவு C. 203/139.

2. ஷெயிறை "பீலி கொண்டை" பர. ெந. இல. இருபத்தொன்றுடன் எட்டிலொன்று (பர. ெந. இல. $21\frac{1}{8}$). கிழக்கெல்லையிலிருக்கும் கிணற்றிலரைவாசிப் பாகமும். எல்லை: கிழக்கு—கணபதிப்பிள்ளை நாகலிங்கத்திற்குரிய வாதனம். வடக்கு — கணபதிப்பிள்ளை நாகலிங்கத்தின் உரிமைக்காரர்கட்குரிய வாதனம். மேற்கு — தம்பையா ஞானனந்தத்திற்கும், சகோதரிக்கும், அம்பிகைபாகர் வல்லிபுரத்திற்குமுரியவாதனங்களும், ஒழுங்கையும். தெற்கு — ஒழுங்கை. இதன் பதிவு C. 237/10.

**வை. ஏரம்பமூர்த்தி,**
கொம்மிஷனர்.

காரைநகர், 1960-ம் ஞு புரட்டாசிமீ 28-ம் திகதி.

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2747**

மண்டைதீவு
விஞசித்தம்பி ஐயாத்துரை
— வழக்காளி.

எதிராக, மண்டைதீவு
1. காண்டவனம் கைலாயபிள்ளை
2. இராசம்மா மகள் சின்னன் இளையதம்பி — எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M. B. 2747-ம்இலக்கவழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1960-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 28-ம்திகதி பிற்பகல் 2மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 600. இன்னும் ரூபா 350-க்கு 9-3-59 தொடக்கம், 9-9-59 வரையும் 12%வட்டியும், தீர்வைத்திகதிதொடக்கம் இறுக்கும்வரை முழுத்தொகைக்கும் 5%வட்டியும், கோட்டுச் செலவு 164ரூபா 52சதமும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 2827**

சென். யேம்ஸ் வீதி, யாழ்ப்பாணம்
1. எஸ் எஸ். ஜென்சனும்
2. பெண் அஞ்சலீனு லேடாம்பாவும்
— வழக்காளிகள்.

எதிராக
யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, ஆரிய குளத்தடி
ஆழ்வான் வல்லிபுரம்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 2827-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1960-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 29-ம்திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபா 3270. இன்னும் ரூபா 3000-க்கு 18-5-59 தொடக்கம், 20-8-59 வரை 12% வட்டியும், அதன்பின் 5% வட்டியும் இறுபடும்வரையும், இதில் கொடுத்த தொகை ரூபா 500 கழித்து மிகுதி.

### ஆதன டாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்கிழக்கிலுற "இலகடி" விசாலம் 17 – 8 குளி. கல்வீடும், கிணற்றில் பங்கும், செய்பயிர்வான்பயிர்களும். இதற்கு எல்லை: கிழக்கு — ரோட்டும், முருகர் சிவகுருவின் ஆதனமும். வடக்கு—ஆழ்வான் பெண் நல்லபிள்ளையின் ஆதனம். மேற்கு—ரோட்டு. தெற்கு—2-ம், 3-ம் துண்டுக் காணி. இதடங்கலும். இதன் வடக்குக் காணிக்குளிருக்கும் கிணற்றுக்கு 4-ம் துண்டு என விடப்பட்டு இக்காணிக்கூடாகச்செல்லும் கையொழுங்கையால் போக்குவரவு செய்யும் உரித்தும், மேற்படி கிணற்றுக்குப் போக்குவரவுசெய்யும் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும். இது 1932 ஆம் ஆண்டு புரட்டாசிமாதம் 5-ம் திகதி உத்தரவுபெற்ற நிலஅளவைக்காரன் டபிள்யூ. ஈ. இரத்தினகோபால் அவர்களால் தயாரிக்கப்பட்ட 66 ஆம் இலக்கப்படத்தில் நன்கு விபரிக்கப்பட்டதும், 1348 ஆம் இலக்கப்பிரிவிடல் வழக்கில் அணைத்திருப்பதும்.

**ஆர். கனகரத்தினம்,**
கொம்மிஷனர்.

நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

---

### நன்றித் துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதா, அர்ச். பிலிப்புநேரியார், அர்ச். செபஸ்தியார் இவர்களின் வேண்டுதலாலும் எனக்குவந்த ஆபத்தான வியாதியில் நின்றும் காப்பாற்றப்பட்டேன் என் நன்றியறிதலைத் தெரிவிக்கின்றேன். பிரசுர தாமதத்திற்காக மன்னிப்புக் கோருகிறேன். இவர்களின் நாமம் என்றும் புகழப்படுவதாக.

மரியாயின் தாசன்.

---

### காணி விபரம்

வடமாகாண டிஸ்திறிக் தீவுப்பகுதி அல்லைப்பிட்டி கோவில்பற்று, மண்டைதீவுஇறை "புதுவெளி" என்னும் காணி நில. பர. 20. எல்லை: கிழக்கு — ஒழுங்கை. வடக்கு — முத்துலிங்கம் சச்சிதானந்தத்துக்கும், பங்காளருக்கும் உரியஆதனம். மேற்கு — குருநாதர் சரவணமுத்துவின் ஆதனம். தெற்கு— பள்ளிவாசலுக்கும், கார்த்திகேசு கிருஷ்ணபிள்ளைக்கும் உரியஆதனம். இதுஅடங்கலிற் சொரியலாய்க் கால் ($\frac{1}{4}$) பங்கும்.

**ஆர். கனகரத்தினம்,**
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 35, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

## எமது கத்தோலிக்க பிரசுரங்கள்

| | ரூ. ச. |
|---|---|
| பாலர்குறிப்பிடம் ... | 40 |
| சின்னக் குறிப்பிடம் ... | 75 |
| பெரிய குறிப்பிடம் ... | 1-75 |
| மெய்விவாகக் குறிப்பிடம் ... | 05 |
| உறுதிப்பூசுதற் குறிப்பிடம் ... | 05 |
| சத்தியவேத தர்ப்பணம் போதககாண்டம் (Part I) ... | 2-50 |
| எனது பூசைப் புத்தகம் திவ்வியபூசைஆராதனையை முழுதாய் அடக்கியது. | |
| கிளேஸ் பேப்பர் ... | 5-00 |
| மோக்ஷபாதை (கலிக்கோ) ... | 4-50 |
| ,, (தோல்) ... | 7-00 |
| முத்தித்திறவுகோல் (கலிக்கோ) ... | 2-50 |
| ,, (தோல்) ... | 3-50 |
| செபச்செண்டு ... | 85 |
| பிரசித்த ஆராதனையின் சாதாரண செபங்கள் ... | 2-00 |
| திவ்விய பூசையின் சாதாரண செபங்கள் ... | 40 |
| நித்திய ஆராதனை ... | 25 |
| இரா ஆராதனை ... | 25 |
| திருமணித்தியாலம் ... | 40 |
| திவ்யபூசை முகத்துவம் ... | 2-50 |
| பூசை உதவி மந்திரம் ... | 40 |
| பூசை உதவி மந்திரம் (மட்டை) ... | 15 |
| வேதாகம வாசிப்பு ... | 90 |
| சற்பிரசாத அன்பன் ... | 20 |
| யேசுநாதரின் சுவிசேஷம் அல்லது நான்கு சுவிசேஷங்களின் ஒப்புமை ... | 2-50 |
| கிறீஸ்துவபோதகம் (Part I) ... | 1-25 |
| அர்ச். மார்க்கு சுவிசேஷம் ... | 1-25 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் ... | 1-50 |
| பசாம் ... | 1-50 |
| சிலுவைப் பாதை ... | 30 |
| மகா மனந்திரும்புதல் இயக்கப் பிரசங்கங்கள் ... | 1-00 |
| சுவிசேஷ விரித்துரை (பசாமுடன்) ... | 6-50 |
| (பசாமில்லாமல்) ... | 5-00 |
| கத்தோலிக்கு கீர்த்தனைமாலை லத்தீன் 1-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| தமிழ் 2-ம் பகுதி (நோட்டில்லாமல்) ... | 75 |
| இரண்டும்சேர்த்துக் கட்டியது (நோட்டில்லாமல்) ... | 1-50 |
| லத்தீன் (1-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் (2-ம் பகுதி நோட்டுகளுடன்) ... | 2-25 |
| தமிழ் லத்தீன் இரண்டும் (நோட்டுகளுடன்) ... | 4-75 |
| ஆண்டவர் சரித்திரம் (Part I) ... | 90 |
| ,, (Part II) ... | 90 |
| ,, (Part III) | 90 |
| திருஇருதய வணக்கமாதம் ... | 1-50 |
| தேவமாதாவின் வணக்கமாதம் ... | 1-50 |
| மரியாயின் மாசில்லாத இருதயப் பொக்ஷம் ... | 1-50 |
| அவர்கள் மூன்று சிறுவர்கள் (பாத்திமா) ... | 2-50 |
| கிறீஸ்துநாதரும் அவருடைய போதனைகளும் ... | 1-50 |
| தவதின உற்சவம் ... | 75 |
| தரும அப்பம் ... | 1-00 |
| பத்திச் சபைகள் ... | 20 |
| ஆத்தும தரிசனம் ... | 20 |
| தமிழரின் பூர்வசரித்திரம் ... | 50 |
| ஹெலேனு அல்லது திருக்காய அடையாளம்பெற்ற இலங்கைக் கன்னிகை சரித்திரம் ... | 35 |
| அர்ச். லூயிமேரி கிறிஞ்ஞோன் சீவிய சரித்திரம் ... | 40 |
| Oremus Book ... | 1-25 |
| ஆத்துமாக்களின்அழுகைக்குரல் ... | 1-55 |
| ஞானவொடுக்கப் பிரசங்கம் ... | 1-50 |
| இலங்கும் மகிமைமுடி ... | 30 |
| அர்ச். வாரம் ... | 95 |

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறுமதியின் அரைவாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

**அதிபர்,**
சஞ்சுசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, Septemder 29-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org